...ா விபரம்
—
...ண்டு ரூ 7,
..., 3 8 0

# திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 6-11-49 | இதழ் 19

## என்ன பிரயோசனம்?

"அரசியல் சுதந்திரம் பெற்றுவிட்டால் மட்டும் போதாது. அதைத் தொடர்ந்து பொருளாதார சுதந்தரமும் கிடைக்கவேண்டும். மனிதனின் கஷ்டங்களையும் அவதிகளையும் குறைப்பது நம்மால் முடிந்த காரியமே. இதை நோக்கமாகக் கொள்ளாவிடில் அரசியலினால் என்னதான் பிரயோசனம்? நமது திறமையான வாதங்களினால்தான் என்ன பிரயோசனம்?"

பண்டித நேரு
சான்பிரான்ஸிஸ்கோ.
31—10—49

# சீறிடுபவர், சிந்தனைக்கு!

இருப்பதையெல்லாம், எங்கேயோ இருப்பவனுக்குக் கொடுத்துவிட்டு' 'இல்லை', 'என் செய்வேன்' என்று யாராவதுகூறினால், அவனை ஏமாந்தவன் என்று கூறுவார்கள்!

'அவன்' யார் தெரியுமா, எனது அருமைச் சகோதரன் — அவன் பிறப்பும், இனமும் வேறுதான்— இருந்தாலும் அவன் என் சகோதரன். எவ்வளவு நல்லவன் தெரியுமா? எது கேட்டாலும், கொடுத்துவிடுவான். இதோ பாருங்கள் அவன் சகோதர வாஞ்சையை. எங்கே, தம்பி எடு மணிபர்சை! என்று, ஆசைப் போக்கில் மதிமயங்கிப் போன ஆளிடம் பேரம்பேசி அவனை ஏமாற்றி வாழ்பவனை எத்தன் என்று அழைப்பார்கள்!

பிடுங்கிய பணத்திற்குப் பதிலாக நன்றிகூடக்காட்டாது, தன்வாழ்வை உயர்த்திக்கொள்ள, மணிபர்சையும் கொடுத்துவிட்டு அவனிடம், 'அண்ணே! கொடு அரையணு' என்று பிச்சை கேட்கும் பாணியில் கேட்பவனை ஏமாளி, எதுக்கும் இலாயக்கில்லாதவன் என்று கூறலாம்!

சுயநலக்காரன், எத்தன், ஏமாற்றி வாழ்வை அமைத்துக் கொள்பவன்-ஏமாளி, வாழத் தெரியாதவன், இருப்பதையும் இழந்து தவிப்பவன் நினைவுகள், இந்தியசர்க்காரின் புதுச்சட்டம் ஒன்று அமுலுக்குவந்திருப்பதையறியும் எல்லோர் உள்ளத்திலும் ஓடிவரவே செய்யும்.

சுரங்கம் — சுரங்கப்பொருள்கள் சம்பந்தமாகக்கடந்த ஆண்டு இந்திய சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட சட்டம், கடந்த மாதம் 25-ந்தேதி முதல் அமுலுக்கு வந்துவிட்டது. இந்தச்சட்டம் எல்லாமாகாணங்களையும் கட்டுப்படுத்துவதாகும். இந்தச் சட்டப்படி, சிலசாதாரண "சுரங்கப் பொருள்" தவிர, ஏனையவையெல்லாம் மத்திய சர்க்காருக்குக் கட்டப்பட்டதாகவே இருக்கும், சுரங்கப் பொருள் சம்பந்தமாகச் சலுகைகள், ஏதாவது பெறவேண்டுமென்றால், அது அச்சுரங்கப் பொருள் கிடைக்கும் மாகாணத்துக்குக் கிடைக்காது, மத்தியசர்க்காருக்கே 'அந்த' அதிகாரம், உண்டு. அதிகாரம் என்றால் சாதாரணமானதல்ல, எது வேண்டுமானாலும், எது செய்வதானாலும், அவர்கள் இஷ்டப்படி நடந்துகொள்ளலாம். இச்சட்டத்தின் கீழ் இந்திய சர்க்காரின் கைக்கு இன்றியமையாத சுரங்கப்பொருள்களெல்லாம் போகின்றன. நிலக்கரி, இரும்புத் தாதுப் பொருள் முதலியவை, இவைகளில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியனவாகும்.

சுரங்கப் பொருள் சம்பந்தமாக, ஏதாவது "உத்தரவு" பெறவோ, 'அனுமதி' பெறவோ, வேண்டுமானால் மத்திய சர்க்காருக்கே விண்ணப்பிக்க வேண்டும். சென்னை மாகாணத்திலிருக்கும் ஒருவர், தென்ஆற்காட்டி லிருக்கும் ஒரு சுரங்கத்தைக் குத்தகைக்கு எடுத்து நடத்தவோ, அல்லது 'லைசென்ஸ்' பெறவோ வேண்டுமானால், அவர் மத்திய சர்க்காரிடமே விண்ணப்பிக்க வேண்டும். மத்திய சர்க்காரின் நிபந்தனைகளை, சட்ட திட்டங்களை அவர் ஏற்றுக்கொண்டால்தான், அவருக்கு லைசென்சோ வேறு அனுமதிகளோ கொடுக்கப்படும்.

எந்த நிபந்தனைகளின்மீது, இந்தியசர்க்கார், சுரங்கங்களைக்குத்தகை விடலாம், அனுமதி தரலாம் என்று வரையறுக்கிறதோ அவைகளைப் பூர்த்திசெய்தால் மட்டுமே, அனுமதி இச்சட்டத்தின் மூலம் அளிக்கப்படும்.

சென்னைமாகாணம் வளம் நிறைந்தது—சுரங்கப்பொருள்கள், மிகுந்தது என்று நாம், அடிக்கடி எடுத்துக்காட்டி வருகிறோம்.

சிங்கரேணி, தென் ஆற்காடு மாவட்டம், சேலம் மாவட்டம், திருநெல்வேலிமாவட்டம், மதுரைமாவட்டம் ராயலசீமா, கோதாவரி பள்ளத்தாக்கு முதலிய இடங்களில் நிலக்கரியும், மைசூர், பெல்லாரி முதலிய இடங்களில் தங்கமும், நெல்லூர் மாவட்டத்தில் செம்பும், பத்[...] வதி, கெம்மாங்குடி (மைசூர்) கஞ்[...] மலை, கோடுமலை, தாலமலை, கொ[...] மலை, போன்ற சேலம்மாவட்டத்தை[...] சேர்ந்த இடங்களில் இரும்பும், ப[...] இடங்களில் மாங்கனீஸ், மைக[...] மாக்னசைட், மோனசைட், தோரிய[...] முதலிய முக்கிய இன்றியமைய[...] தாதுப் பொருள்களும் சென்[...] மாகாணத்தில் இருக்கின்றன, அ[...] சக்திக்குத் தேவையான தோரிய[...] இங்குதான்! ரேடியம் இங்குதான்[...] சுரங்கப் பொருள்கள் இவ்வள[...] மிகுந்ததாகச் சென்னை மாகாண[...] இருக்கிறது—வளம் வழிந்து ஓ[...] றது, இங்கு! ஆனால், இத்தனையு[...] மத்திய சர்க்காருக்குக் கட்டுப்ப[...] டதேயொழிய மாகாண சர்க்கா[...] டையதல்ல.

ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தி[...] செயற்கையாக வைரம் செய்யமு[...] யும் என்று கண்டுபிடித்திருக்கிற[...] கள். வைரம் இருக்கிறதே, அ[...] விடக் குறைந்தவிலையில், சாதார[...] மாகயாரும் உபயோகிக்கக்கூடி[...] முறையில் இந்த வைரம் கிடைக்க[...] செய்யலாம். சிவப்புவேண்டுமா, பச்[...] தேவையா, பழுப்பு நிறம் கேட்கிறீ[...] களா, மஞ்சளாக இருக்கவேண்டும[...] எந்த நிறத்தில், எப்படி வேண்[...] மானாலும் தயாரிக்க முடியுமாம்.

வைரம்போல ஒளி உண்டு, வ[...] டக்கணக்கில் அந்த ஒளி நீடித்[...] நிற்கும், அடிக்கடி 'பாலிஷ்' செ[...] வேண்டிய அவசியம் கிடையாத[...] இத்தகைய செயற்கை வைரம்[...] அசல் வைரம் போலவே இருக்[...] மாம்.

ஆனால், விலை, வைரத்தை வி[...] குறைந்ததாக இருக்குமென்று[...] ஆசைப்பட்டு அது வாங்கப் பண[...] இல்லையே என்று ஏங்கும் சாதார[...] குடும்பப் பெண்கள்கூட, வாங்[...] அணிந்துகொள்ளக்கூடிய விலையி[...] கிடைக்குமாம்.

இத்தகைய செயற்கை வைர[...] தயாரிப்பதற்கு வேண்டிய மூல[...] பொருள் ரூடைல் (Rutile) என்[...] தாகும். இது மலபார் கடற்க[...] யிலும், திருவாங்கூரிலும் அபரிமி[...] மாகக் கிடைக்கும் மானசை[...] பொருள்களிலிருந்து கிடைப்ப[...] கும்.

செயற்கை வைரம் செய்வதற்[...]

(4-ம் பக்கம் பார்க்க)

# ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி!

★ ★ ★

ஆயுதத் தளவாடங்களுக்கு அதிகத் தொகை ஏன்?

சமாதானம் தழைக்க அது அல்ல வழி!

'பட்ஜட்'டில் பாதிக்குமேல் தளவாடச் செலவா?

சக்தியையும் நேரத்தையும் வீணாக்குகிறீர்களே!

இதை, வேறு வழியில் சிறிதளவு செலவிட்டால், அமைதியும் மகிழ்ச்சியும் முகிழ்க்காதா!

ிவரும் பண்டித நேரு அவர்
தனக்குக் கொலம்பியா பல்கலைக்
ம் பட்டமளித்துக் கௌரவித்த
து, ஆற்றிய சொற்பொழிவில்,
ய சொற்கள் இவை. இந்த அறி
களைக் காணும்பொழுது, உண்
லேயே நம் உள்ளம் மகிழ்கிறது.
நாடுகள், 'பட்ஜட்' போடும்
ழுது ராணுவச் செலவை அடிப்
யாக வைத்தே, திட்டம் வகுக்
ன, அது தீது, கொடுமை பயக்
டாதுஎன்கிறார். யாரும் மறுக்க
ாத ஒன்று இது, பல நாடுகள்
டிச் செய்கின்றன என்கிறார்
தார். இவ்வழி சென்றால், இன்
விளையாது, இன்னல்தான் ஏற்
என்றும் அறிவுறுத்துகிறார்.
கெனச் செலவிடும் மகத்தான
கையில் சிறிதளவு வேறுவழி
செலவிட்டால் கூடப்
மே, அந்தந்த வழிகளால் ஏற்
பயன் நமக்கு மகிழ்ச்சியையும்,
தியையும் பரிசாகத் தருமே,
ம் ஆயாசத்துடன் கூறியுள்
அனைவரும் ஒத்துக்கொள்ளக்
ய, மறுக்க முடியாத உண்மை
போர்!போர்'! என்ற எண்ணத்
, பாதுகாப்பு என்ற திரையில்
து நாட்டின் பலத்தை, செல்
க, செழிப்பை ராணுவத்தால்,
பெற்றிருக்கும் விமானப்படை
போர்க் கப்பல்களின் எண்ணிக்
ல் எந்த நாடும், மதிப்பிட
ுவது தவறு. இத்தகைய
மும், ஆசையும், எதிர்பார்க்கும் இன்பத்தை, நன்மையை, பலனை, மக்களுக்கு அளிக்காது. இந்தப் பாதைக்கெனச் செலவிடும் தொகையில், சிறிதளவாவது, வேறு வழிகளில் செலவிட்டால், போர் முழக்கத்துக்கென விரயமாகும் தொகையில், கொஞ்சம் 'பொருள்' மக்களுக்குச் செலவிட்டால், மக்களிடையே இன்பத்தைக் காணலாம்! அவர்கள் மதிப்பையும் பெறலாம்! அவர்கள் மகிழ்ச்சியைக் கண்டு நாமும் மகிழலாம்!

பண்டிதரின் இந்த அறிவுரை பாராட்டக்கூடியது. அதுவும், அவர் அமெரிக்காவில் — போர் முகாம் — ஒன்றில் பவனிவரும் பொழுது, இத்தகைய அறிவுரையைத் தருகிறார் என்று எண்ணும் பொழுது, அவருடைய துணிச்சல் கண்டு, யாருக்கும் பாராட்டத்தான் தோன்றும்.

அமெரிக்காவோ 'போர்' ஒன்று வருகிறது, என்ற எண்ணத்துடனேயே, எல்லாவித ஏற்பாடுகளையும் செய்து வருகிறது. இன்றோ, நாளையோ என்று எண்ணும்படியாக அவ்வளவு, அதி சிரத்தையுடன், மும்முரத்துடன், முனைந்துகிடக்கிறது. ஆண்டுதோறும் அதற்கென, எண்ணிப்பார்க்கவும் இயலாத அளவில், அவ்வளவு தொகையைச் செலவிட்டு வருகிறது. வரும் ஆண்டுக்கு மட்டும் தனது ராணுவப்படையின் உதவிக்கென 15,158,863,498 டாலர்கள் ஒதுக்கும் ஒரு மசோதாவை, சமீபத்தில நிறைவேற்றியுள்ளது, 1516-கோடி டாலர்கள், அதாவது 7200 கோடி ரூபாய்களை, வரும் ஆண்டு இராணுவச்செலவுக்கென ஒதுக்குகிறது! இவ்வளவு ஏராளமான தொகையை, மக்கள் வாழ்வை வேதனை மயமாக்கும் போருக்கென, ஆயுதத் தளவாடங்களுக்கென விரயமாக்குவதைக்காண எவருக்கும் இதயம் துடிக்கும்! இத்தகைய, அழிவுப்பாதையில் விரைந்தோடும் அமெரிக்காவில், பவனி வரும்பொழுது, போர்கூடாது, அது புதுவாழ்வு தந்துவிடாது, அதற்குச் செலவிடும் பணத்தை வேறு வழிகளில் செலவிட்டால், இன்பமும் மகிழ்ச்சியும் ஏற்படும் என்று, துணிந்து கூறியுள்ளார் நேரு. விருந்தாளியாக வந்திருக்கிறோமே, இச்சொல் அமெரிக்காவுக்குக் கசப்பு மருந்தாகக் காணுதா, என்றெல்லாம் எண்ணிப் பார்க்காமல், துணிச்சலுடன் வெளியிட்டுள்ளார். அவரது அறிவுரையைக் காணும்பொழுது, ஒரு பரந்த உபகண்டத்தை நிர்வகிக்கும் பிரதமர்—பண்டிதநேரு அவர்களின் சமாதான வழியை நோக்கும் பொழுது, யாருக்கும் மகிழ்ச்சிதான் ஏற்படும். நேருவின் துணிச்சல், அவரது அறிவுரை, காண நமக்கும் மகிழ்ச்சிதான் ஏற்படுகிறது, உள்ளத்திலிருந்து பாராட்டிக் குவியத்தான் செய்கிறது. ஆனால், அதே வேளையில், இந்தியக் கல்வி மந்திரி அபுல்கலாம் ஆசாத் நினைவு வந்து, நம்மை அலைக்கழிக்கவும் செய்கிறது.

சமீபத்தில் டெல்லியில் ஒரு கல்விக் கழகத்தைத் திறந்து வைத்த பொழுது, 'ஆசை அதிகமுண்டு; ஆனால், செய்யத்தான் முடியவில்லை!!' என்று முகாரி பாடியுள்ளார், நாட்டில் கல்வி மலர எத்தனையோ, திட்டங்களைத் தீட்டிவைத்துள்ளோம், ஆனால் அத்தனையும் நிறைவேற்றக் கையிலே, பணமில்லை, என் செய்வது என்று வழக்கமான பாட்டைப் பாடியுள்ளார்.

பண்டிதநேரு தனது அமெரிக்கப் பவனியின்போது, உலகுக்கு அறிவுறுத்திய, அருஞ்சொல்லும், அதே நேரத்தில் இங்கு ஆசாத் வைக்கும் 'ஒப்பாரி'யும், ஒரே நேரத்தில், எண்ணத்தில் படரும்பொழுது "ஊருக்கடி உபதேசம்! உனக்கல்லடி தோழி!" என்று சொன்ன, உன்மத்தனின் கதை நமக்கு நினைவுக்கு வருகிறது. ஊருக்கெல்லாம் உபதேசம் பொழிவானாம் ஒருத்தன். எப்படி யெப்படி நடந்துகொண்டால், ஊர் முன்னேறமுடியும், எல்லோரும் மகிழமுடியும் என்றெல்லாம். அவன் உபதேச மொழியைக்கேட்ட

அவன் மனைவி, அதன்படியே
நடக்க எண்ணி, வருபவர்களுக்கு
விருந்து, வந்தவர்க்கெல்லாம் வரிசை
என்று வடிக்க ஆரம்பித்தாளாம்.
அதுகண்ட கணவன், "ஏனடி இந்தக்
கோலம்! நான் சம்பாதிப்பது, அதை
வீணர்களுக்கு விரயமாக்குவதா?"
என்று ஆத்திரத்துடன் கேட்க, நீங்
கள்தானே உபதேசித்தீர்கள், ஊரா
ருக்கு, இல்லையென்னாது செய்க, அது
தான் அறம் என்று பதில் சொல்ல,
அதுஊராருக்கடி, உனக்கல்ல!' என்று
விளக்கம் தந்தானாமே, அந்த எண்
ணத்தில் தூய்மை இல்லாதான். உள்
ளொன்று வைத்து புறம் ஒன்று
பேசுபவன் நினைப்புத்தான் வருகி
றது நமக்கு, பண்டிதரின் பவனியில்
சிந்திய அறிவுரையையும், ஆசாத்
வைக்கும் ஒப்பாரியையும் காணும்
பொழுது!

ஆயுத தளவாடங்களுக்கென்று,
பொருளைச் செலவிடல் வீண்; அது
வும் வரும் வருமானத்தில் பெருந்
தொகையை அதற்கெனச் செலவிடல்
அழிவுவேலை என்று பண்டிதர் கூறி
யுள்ளார். அதற்கெனச் செலவிடப்
படும் தொகையை வேறுஎதற்காவது
செலவிட்டால், இன்பம் முகிழ்க்
குமே, எண்ணங்கள் தூய்மை
யடைந்து சமாதானம் கொழிக்குமே
என்றும் சஞ்சலத்துடன், நல்லுரை
கூறியுள்ளார், இந்த நல்லுரையைக்
கண்ட அதேநேரத்தில், ஆசாத்தின்
'முகாரி' இங்குள்ள நிலைமையைப்
பற்றி எண்ணத்தூண்டுகிறது.

நேருவின் நிலை, ஊருக்கடி உப
தேசம், உனக்கல்லடி' என்று கூறிய
ஆளை நமக்கு நினைவுக்குக்கொண்டு
வருகிறது.

இராணுவச் செலவுக்கென அதிக
மான பணம் செலவிடுவது ஆகாது
தகாது, நன்மை தராது என்று கூறு
கிறார். ஆனால், அவரது சர்க்கார்,
இந்தியசர்க்கார் ஆண்டுக்கு எத்தனை
கோடிரூபாய்களை 'பாதுகாப்பு' என்ற
பெயரால் செலவிடுகிறது என்ற
நினைவு அந்நேரத்தில் நேருவுக்குவரா
வில்லைப்போலும்!

ஆண்டுக்கு வருமானத்தில் பாதிக்
குமேல் இந்தியசர்க்கார் இராணுவம்
படை ஆகியவைகளுக்கெனச் செல
வழிக்கிறது. 157 கோடி ரூபாய்களை
தனது பட்ஜட்டில் ஒதுக்குகிறது!
இந்தியா-வின் ஏழ்மைநிலையில் வரவில்
பாதித்தொகையை, இராணுவத்துக்
கெனச்செலவிட்டுத் தவிக்கிறது.

வேறுபல மக்கள் நன்மைக்கான
திட்டங்களை நிறைவேற்றாமல், அமுல்
நடத்தாமல், இன்பம் தராமல்.

இருந்தும் நேரு, அமெரிக்காவில்
அறிவுரை கூறியுள்ளார், இராணு
வத்துக்கெனச் செலவிடும் அவ்வ
ளவு தொகையில் சிறிதளவாவது,
வேறு வழிகளில் செலவிட்டால் எவ்
வளவுமகிழ்ச்சியும் இன்பமும் பரிசா
கக் கிடைக்கும் தெரியுமா, என்று.
அந்த அறிவுரையை, நேரு இந்
தியா விஷயத்தில் கடைப்பிடித்
திருந்தால், ஆசாத் ஏன், அல்லல்
பாடம் படிக்கப்போகிறார்!

கல்விவளர்ச்சி, நேரு கூறுவது
போல மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்று—
மக்களை மக்களாக ஆக்குவது,
கருந்தனம் போன்றது. இந்த நல்ல
காரியதுக்குப் பணம் இல்லையே, என்
செய்வது என்று ஏங்குகிறார்,
ஆசாத். இருந்தால், என்னென்
னமோ செய்யத் திட்டம்வைத்திருக்
கிறேன், என்கிறார்; இல்லாததால்,
எதுவும் இயலவில்லை— இருந்தாலும்
பொறுத்துக் கொள்ளுங்கள் என்று
போதிக்கிறார்!

இந்திய சர்க்காரோ, இராணுவத்
துக்காக வருமானத்தில் பாதிக்கு
மேல் செலவிடுகிறது, விரயமாக்கு
கிறது!

பிரதமர் நேருவோ, இராணுவ
ஆயுததளவாடங்களுக்கென அபரி
மிதமாகச் செலவிடுவது, அடாது
கூடாது என்று அறிவுரை கூறுகி
றார், அங்கு, அமெரிக்காவில், அதற்
குச் செலவிடும் தொகையை வேறு
'எதற்காவது' செலவிட்டால், பல
னும் பயனும் அதிகமாகுமே என்று
ஆயாசத்துடன் கூறுகிறார்!

வேறு எதற்கும் செலவிட வேண்
டாம், கல்வி வளர்ச்சி, மக்கள் முன்
னேற்றம், ஆகியவைகளுக்குச் செல
விடக்கூடாதா என்று கேட்கத்
தோன்றுகிறது நமக்கு!

நேருவின் போதனை, ஊருக்கடி
உபதேசம் என்று இருக்கக்கூடாது
—இதுவரை 'இவ்வளவு' தொகையை
ராணுவம் என்ற படாடோபத்துக்
காகச் செலவிட்டதை இனியும் நீடிக்
கக்கூடாது. நேரு வார்த்தையில்
கூறவேண்டுமானால், இது பயன்
தராது, இதனால் சமாதானமும்
அமைதியும் ஏற்பட முடியாது.

எனவே, ஏராளமான அளவில்,
இங்கும் விரயமாகும் தொகையைக்
குறைக்க, அமெரிக்காவிலிருந்து,
திரும்பியதும் நேரு முயல்வார்
நேர்மைப் பாதையில் நடப்பார்
நல்லது நாடுவாரா? அவர் 'அ
தி'க்குள் அடங்கிவிட்டால், அவர்
நண்பர்களாவது, இதை நினைவூட்
வார்களா, நிலைமையை விளக்குவ
களா, என்று கேட்க விரும்புகிறோ
—தொல்லை படும் சமுதாயத்தி
சார்பில்.

அங்கு, ஒன்று பேசிவிட்
அதற்கு நேர்மாறாக இங்கு நட
பது, நேர்மைக்கு, காந்தியார் க
வந்த 'சத்தியத்துக்கு' நேர்
ணானது. பார்ப்போம், எந்த
பாதையில் நேரு செல்வார், அவர்
கட்சியினர் பின்பற்றுவர் என்பதை

---

2-ம் பக்கத் தொடர்ச்சி

தேவையான சுரங்கப்பொருள்க
இருக்கிறது, இங்கு! இதன் மூல
எவ்வளவோ வருமானத்தை மா
ணம் பெறமுடியும்! ஆனால், வா
கால் இங்கேயொழிய, நீர்தான் அ
குப்பாய்ச்சப்படுகிறதே!

மத்திய சர்க்காரின் சுரங்க
பொருள்—சுரங்கங்கள் சட்டப்
செயற்கை வைரம் செய்வதற்
தேவையான ரூடைல் பொருள்
அவர்கள் கைக்கேபோகிறது! அ
கள்கட்டுப்பாட்டுக்குக் கீழே
இருக்கிறது!

இவ்வளவு வளம்நிரம்பி
தாக, சுரங்கப்பொருள்களை உ
யதாகச்சென்னை மாகாணம் திரா
டம்—இருக்கிறது.

இருந்தும் 'ஏமாளி'யாக இரு
றோம், காசை 'அங்கு' கொடுத்
விட்டு 'பிச்சை'க் கேட்கிறோம்! சு
கங்களையும், சுரங்கப் பொருள்க
யும் மத்திய சர்க்கார் தன் கட்
பாட்டுக்குள் வைத்துக்கொள்கிற
இதனால், ஏற்படும் லாபம், வ
பணம், எல்லாம் அவர்களுக்
சொந்தமாகிறது!

திராவிடம் பிரிந்தால், இவை
முடையதாக, எத்தகை
வளமுள்ளவர்களாக நாம் வாழமு
யும்! என்ன இல்லை இங்கு! எல்
இருக்கிறதே, வர்ணிக்கமுடிய
அளவில்!

ஏன், நாம் தனித்து நின்று, 
மாக, வாழ்வுடையவர்களாக ஆ
கூடாது. நினைத்துப் பார்க்கவேண்
கிறோம், 'திராவிட நாடு' என்
பேச்சைக் கேட்டாலுமே சிறி
காமராஜர்களை! ✲

# * துன்பக்கேணி *

'காத்தானுக்கு கல்யாணம்
ய்ய..."
'பெண்ணு, யாருடா?"
'மாவூர் மருதை, மவங்க!"
'நல்ல பெண்ணு, நடுவா
டா?"
'பண்ணைக்கேத்ததுங்க. பயந்து
ங்கி நடக்குங்க!"

ன் காத்தானுக்கு கல்யாணம்
ய விருமபுவான் கூத்தன்,
பத்தை 'ஆண்டை'யிடம் தெரி
ான்! மிராசுதாரர் கேட்பார்,
போற 'நடவாள்' நன்ருக
ளா, சண்டித்தனம் செய்யா
ாணி எடுப்பாளா, 'ஆச்சி' கூப்
தும் அடங்கி ஒடுங்கி நிற்
, என்று!

ய்யா'விடமிருந்து, மகன் கல்யா
துக்குப் பணம் வாங்க வேண்டி
ன கூத்தன், 'அய்யா'வுக்குத்
தி ஏற்படும்படி தகவல்கள்
ான். மிராசுதாரருக்குச் சரி
ப்பட்டால், காத்தானிடம்
டு' எழுதி வாங்கிக்கொண்டு
கொடுப்பார்!

னம் பெற்றுக் கொண்டபின்
திகளான காத்தானும் காத்
யும் ஆண்டையின் அடிமைக
விடுவர்! சாகும் வரை!
ாவுக்கே உழைத்துக் கொட்டு
இடையில் எந்தவித விமோசன
ஏற்படாது, 'அய்யா'தான்
கொடுத்திருக்கிருரே!
ாசுதாரர் கொடுத்த 50
து 60 ரூபாய்கள் 'அவர்கள்'
வை, அதாது பண்ணைக்குப்
ம் வைத்துவிடும்! காத்தானும்
காயியும், இளமை, அதுதாண்டி
து, அது கடந்த வயோதிகப்
ம் ஆகிய வாழ்க்கையின் சகல
களிலும், ஆண்டை அழைத்த
க்கு வந்து, உழைத்துக்
ண்டேயிருப்பர் — ஒருநாள்
தவறமாட்டார்கள்! ஓய்வும்,
தியும் அவர்களுக்கும் கிடைப்
ண்டு கடைசியில — அதாவது
உடலைவிட்டுப் போனபின்பு!
வருக்கும் பிறந்த மகன் 'அஞ்

சான்' வாழ்க்கை 6 வயதில் அய்யா வீட்டுக்கு மாடு மேய்ப்பதில் ஆரம்ப மாகும், 10 வயதில் 'பொடி—ஆள்' ஆக வேலை செய்வான், பின் கல்யாணம்—'கடன்' – அடிமைச் சீட்டு, உழைப்பு, சாவு!

* * *

இந்த நிகழ்ச்சிச் சித்திரம், துரதிர்ஷ்ட இந்நாட்டின் ஒரு படப்பிடிப்பு! வர்ணனையல்ல, வாழப்பிறந்து வாழ்க்கையென்பது பண்ணையின் வயல்தான் என்று கருதி, உழைத்து, சாவும், உழைப்பாளிகள்-விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கை ஓவியம்! பண்ணையில் பாடுபடுவான், பண்ணையாளாகயிருப்பான், கூப்பிட்ட குரல் கேட்டு, இட்ட வேலைகள் எல்லாம் செய்து, என்ன வேண்டுமானாலும் கொண்டுவந்து தந்து, 'ஏண்டா' என்று அழைக்கு முன் 'ஏன், சாமி!' என்று ஓடிவந்து, ஆண்டையின் மீது பக்தியும், தான்வாழா விட்டாலும் அவர் வாழ்ந்தால் போதும் என்ற விசுவாசமும் கொண்டு நிற்கும், இலட்சக்கணக்கான, விவசாய உழைப்பாளிகளின் வேதனைச் சித்திரம், நாம் மேலே தீட்டியிருப்பது!

நாட்டின் உயிர்நாடிகள், சூதுவாதறியா பாமரக் கூட்டம், படிப்பு வாசனை கூட அறியாது 'பண்ணையாள்' என்று கூறிக்கொள்வதிலேயே பெருமையும், பூரிப்பும் கொண்டு, புழுக்களாய் — மண்கூடுகளாய் — மண்ணோடு மண்ணாகும் வேதனைக் காட்சி இது! நெஞ்சு வெடிக்கும் நித்திய நிகழ்ச்சி!

இந்நாட்டைத் தவிர வேறு எங்கும் "காணமுடியாத கோர வாழ்வு" இது! இந்த வாழ்வுத் திருத்தப்பட வேண்டும், விவசாயிகளான அவர்களும் 'மனிதர்'களாக வாழவேண்டும் என்ற எண்ணத்துடன், இரண்டு ஆண்டுகளுக்கு முன் சர்க்கார் யோசனையின் பேரில் விவசாய அபிவிருத்தி குறித்து ஆலோசனைகள் கூறுமாறு நியமிக்கப்பட்டிருந்த ஜே. சி. குமரப்பா கமிட்டி, இப்போது விவசாய அபிவிருத்தி சம்பந்தமாக ஆட்சியாளருக்குத் தெரிவித்துள்ளது ஒரு யோசனை தன்னுடைய பல சிபார்சுகளில் ஒன்ருக. விவசாய முன்னேற்றம் குறித்து அக்கமிட்டி சமர்ப்பித்துள்ள ஆலோசனைகள், நம்மைப் பொறுத்தவரையில், நாட்டுக்கு நல்லது செய்ய முடியாது என்றே நாம் நம்பினுலும், விவசாயத் தொழிலாளர் நிலைபற்றி அது குறிப்பிட்டுள்ள யோசனை நம் பாராட்டுக்குரியதாகிறது.

விவசாய அடிமைத்தனம் சட்ட விரோதமாக்கப்படவேண்டும்.

அவர்களுக்கென, வாழும் மனைக்கட்டுகள் கிடைக்கச் செய்யவேண்டும்.

இந்த இரண்டு அம்சங்களும் அவர்கள் யோசனைகளில், சிந்தியிருப்பவையாகும். உடனடிப் பிரச்னை என்ற அளவில் இவை வரவேற்கப்படவேண்டியது மட்டுமல்ல, ஆளவந்தார், இவைகள் பற்றிக் கவனம் செலுத்தி ஆவன செய்யவேண்டிய விஷயமுமாகும்.

விவசாயம் இந்நாட்டின் ஜீவநாடி. அந்த விவசாயத் தொழிலில் கழனியிறங்கி காலைமுதல் மாலைவரையில், பிறந்ததுமுதல் சாகும்வரை உழைக்கும் விவசாயித்தொழிலாளர்கள்— ஆதித்திராவிடப் பெருங்குடிமக்களே யாவர்!

ஊருக்கு உழைக்கும் கூட்டம் இது! கள்ளங் கபடற்றது, கல்வி வாசனை அறியாதது, 'பண்ணை'யே வாழ்க்கை, 'ஆண்டை'யே கடவுள் என்று எண்ணியுழைக்கும் ஏழைப் பட்டாளம் இவர்கள்! மாசுபடியாத உள்ளங்களையுடைய இந்த மனித மாணிக்கங்களுக்கு — இந்துமதம் தந்திருக்கும் பரிசுகள் — தீண்டப்படாதார், பஞ்சமர்கள் என்பன! பயிர்த்தொழிலைச் செய்வதும், அதற்காகப் பாடுபடுவதும் இவர்கள் தான்!

இருந்தும், இன்றுவரை இவர்கள் வாழ்வு சோபிதமாகவில்லை! துளி கூட முன்னேறச் செய்யப்படவில்லை!

மகன் மாடு மேய்ப்பான்!

மனைவியும் ஆளும் உழைத்துக் கொண்டேயிருப்பார்கள்!

பெற்றோர்—இருந்தால்—அவர்

களுடைய வேலையும் அது தான்!

இப்படி, உருளுகிறது, அவர்கள் உலகம்! இத்துணை உழைப்புக்கும் அவர்களுக்கு கிடைப்பதோ பட்டினி, பசி, ஏழ்மை!

ஆண்டையிடம் 'சீட்டு' எழுதிக் கொடுத்துவிட்டுப் பணம் வாங்கி விட்டால், பின் வாழ்நாள் முழுதும் அவன் பண்ணையின் அடிமையாகி விடுகிறான். இந்த அடிமை விலங்கிலிருந்து, அவனால் என்றும் மீள முடியாது—சாப்பாட்டுக்கேத் திண்டாடும் அவன், எப்படி, 50-அல்லது 60-ரூபாய்க் கடனைத் திருப்பித்தர முடியும்!

"காசு" கொடுத்து தன் வாழ்க்கையைப் பணமயமாக்கிக் கொண்ட மிராசுதாரருக்கு உழைக்கும் இவர்களுக்கென சொந்தச் சொத்து எதுவுமே கிடையாது! குருவிகூட கூடுகட்டிக்கொண்டிருக்கும் "மரம்" தன்னுடையது என நினைத்துச் சுற்றிக்கொண்டுவரும்! ஆனால், இவர்களுக்கோ, குந்தவும் இடம் இடையாது! ஆண்டையின்—மனைக் கட்டில்—குடியிருந்து வருவார்கள். என்றாவது, ஆண்டைக்கு கோபம் வந்து 'வெளியேறுங்கள்' என்று விரட்டினால் இவர்கள் கதி நிர்கதி தான்! வானமே கூரை, தரையே வீடு என்ற வெட்டவெளியில்தான் கிடக்கவேண்டும்! இந்நாட்டின், பரம்பரைக் குடிகள், இவர்கள்! இவர்களின்நிலை, அரசியல், அறிவியல், பொருளியல் எல்லாவற்றிலும் பரிதாபப்படக்கூடியது! கண்ணீர் சிந்தக் கூடியது!!

குடும்பம் முழுமையுமே, கஷ்டப்பட்டு உழைத்தும் இவர்களுக்கென, வாழ்வதற்கூட, ஒரு 'சிறுமனை' கிடையாது — இந்தப் பரந்த உபகண்டத்தில்! "பாரதமாதா" தாண்டவம் புரியும் நாட்டில்! இருக்க இடமில்லாதது மட்டுமல்ல, இவர்கள் தினசரி வாழ்க்கையை நடத்துவது இருக்கிறதே அது மிகவும் விசித்திரமானது—வேதனை யூட்டக்கூடியது! தினசரி உழைத்தால்தான், இவர்கள் வயறு நிரம்பமுடியும்! மனைவியும் தானுமாக ஒரு குடும்பம், அன்றன்றாடம் உழைக்கும். மாலையில், ஆண்டை கூலிபோடுவார், அன்றன்றைய கூலியாகவரும் நெல்லை, அப்போதைக் கப்போது, குத்தி, அரிசியாக்கி—கஞ்சிகாய்ச்சுவார்கள்!

இப்படி வாழ்வையே உழைப்புமயமாக்கிக் கொண்டிருக்கும் இவர்கள் பண்ணைக்கு மூட்டைகள் கணக்கில் நெல்லைச் சேர்த்துக் குவிக்கும் இவர்கள் வாழ்வு இத்தகைய கோரமானது! நினைத்தாலே நெஞ்சு வெடிக்கும் தன்மையையுடையது!

குந்த இடம், குடிக்க கஞ்சி, இவைகளுக்குத் திண்டாடி கோவணாண்டிகளாய், பிறந்த மேனியராய்த் திரிந்துவரும் இவர்களுடைய குழந்தை குட்டிகள் நிலையோ, கேட்க நெஞ்சு நெகிழும்!

கல்வி மணம் அங்கு வீசாது! பள்ளிகள் என்பதையே, அவர்கள் பார்த்திருக்கமாட்டார்கள்! ஆண்டையின் ஆடு மாடு, அடி, உதை இவைகள்தான் அந்தச் சிறு குழந்தைகளுக்குத் தெரியும்! சின்னஞ்சிறு வயது, துள்ளி விளையாடும் பள்ளிப் பருவம், அப்போதே அவர்களுடைய பரம்பரை அடிமைத்தனம் அவர்களைத் தன் கோரவாய்க்குள் ஆழ்த்திக்கொண்டு விடும்!

* * *

நாட்டின் நரம்புகளாக, யாவரும் வாழ வழி வகுத்து வரும், ஒரு தொழிலாளர் கூட்டத்தின் அவலக் காட்சிகள் இவை. மக்களாகப் பிறந்த, இவர்கள் மாடுகளையும்விட கேவலமாக, வாழும் நிகழ்ச்சித் தொகுப்புகள் இவை! கேட்டால், இதயம் துடிக்கும், பார்த்தால் மனம் பதறும் அவ்வளவு கோரமான நச்சுக்கேணியில் அமுக்கப்பட்டுக் கிடக்கிறார்கள்.

நாட்டுக்கோ சுயராஜ்யம் வந்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இன்றுவரை இவர்கள் துன்ப வாழ்வில், ஒரு துளி நன்மைகூடச் செய்யப்படவில்லை. ஆளவந்தார்களால்!

பழமையால், சனாதனத்தால், வைதீகத்தால், மதத்தால், பிரபுத்துவத்தால், மிராசுக் கொடுமையால் எல்லாவகையிலும் "இழிந்தவர்"களாய் நிற்கும் இவர்களின் வளைந்த முதுகை நிமிர்த்த, ஒடிந்த வாழ்க்கையைச் சரிப்படுத்த, 'ஒருதுரும்பு' அளவுகூட முயற்சிகள் எதுவும் செய்யப்படவில்லை! இந்நாட்டின் பரம்பரைச் சமுதாயம், பொன் விளைத்துக் கொடுத்துவிட்டு புசிக்கவும் வழியின்றி திண்டாடும் பாட்டாளி வர்க்கம், துன்பக் கேணியில், துயரம் தொல்லை என்ற பாம்புகள் பிடுங்க, வறுமையென்ற பாசி பிடித்து இழுக்க, வாடி வதங்கிக் கொண்டு கிடக்கிறது.

இதற்கு ஒரு வழி செய்யவேண்டியது, சர்க்காருடைய முதன்மையானதும், முக்கியமானதுமான பொறுப்பாகும். வேதனையில் உழலும், இவர்கள் வாழ்க்கையை, ஒரே சமயத்தில் இன்பம் நிரம்பியதாகவோ, ஏழ்மையில்லாததாகவோ, இன்றுள்ள சமுதாய அமைப்பில்—அதுவும் தற்போதுள்ள "ஆளவந்தார்"களால் ஆக்கிவிட முடியாது, என்பதை நாம் அறிவோம்! இருந்தாலும், இவர்களை பரம்பரை அடிமையாக ஆக்கும் முறையையும், இவர்கள் இருக்க ஒரு சிறு 'மனை'க்கட்டவது, இந்தப் பரந்த உலகில் அவர்களுக்கெனச் சொந்தமாக இருக்கும்படியான நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்—துன்பக் கேணியில் வீழ்த்தப்பட்டு, தொல்லைகளால் தாக்கப்பட்டு, கண்ணீர் சிந்தி கதறி நிற்கும் ஒரு ஏழ்மைச் சமுதாயத்தின்சார்பில்!

செய்வார்களா! எதிர்பார்க்கலாமா!

## சந்தாதாரர்களுக்கு

"திராவிட நாடு" சந்தாதாரர்கள், சந்தா சம்பந்தமாகக் கடிதம் எழுதும்போது சந்தா எண்ணைக் குறித்தெழுத வேண்டும். சந்தா எண் குறிப்பிடாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா. சந்தா முடியும் தேதி ஒவ்வொரு முகவரிக்கு அடியிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்துச் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளவும்.

மானேஜர்.

# பொறுப்புணர்ச்சி!

தேவைக்கு மிஞ்சியதைச் ...ர்த்துவைத்து, அது, தனக்கும் ...ற்கும் பயன்படாதபடி செய்வ...ல் 'தேர்ச்சி' பெற்றவர்களிடம் ...தசிய உணர்ச்சியோ பொறுப் ...ணர்ச்சியோ இருக்க முடியாது ...ன்று அண்மையில் சென்னைக்கு ...ந்த இந்திய சர்க்காரின் உணவு ...ந்திரி தோழர் ஜெயராம் தாஸ் ...வர்கள் பத்திரிகை நிருபர்களிடம் ...றினர். இப்போது ஏற்பட்டுள்ள ...க்கரை நெருக்கடியைப் பற்றிப் ...சும் பொழுதுதான் இவ்விதம் ...றிப்பிட்டார். இதற்கு மேற்கோ...ாக லண்டனில் நடந்த ஒரு நிகழ்ச்சி...யும் எடுத்துக்காட்டினர்.

அண்மையில் இங்கிலாந்துக்குச் ...சன்றிருந்த ஒரு இந்திய அதிகாரி, ...னக்குக் கொடுக்கப்பட்டிருந்த ...க்கரைக் கூப்பன்களில்தான் பயன் ...டுத்தியது போக மிஞ்சியிருந்த ...ப்பன்களைத் தன்னுடைய மோட் ...ரை ஓட்டியவருக்குப் பரிசாகக் ...காடுத்தார் என்றும், அதை நன்றி ...றிதலுடன் பெற்றுக்கொண்ட ...ரைவர், அந்தக் கூப்பன்களை ...ஷன் அதிகாரிகளிடம் கொடுத்து ...டப் போவதாகவும், அதற்குக் ...ாரணம், தன்னுடைய தேவைக்குப் ...ோதிய சர்க்கரைக் கூப்பன் தன்னி...ம் இருப்பதால், இந்திய அதிகாரி ...காடுத்த கூப்பன்களைத்தான் பயன் ...டுத்துவது முறையல்லவென்று ...றியதாகவும் தோழர் ஜெயராம் ...ாஸ் அவர்கள் ஒரு நிகழ்ச்சியை ...டுத்துக்காட்டி, "நம் நாட்டு மக்க...ளுக்கு இவ்வளவு உயர்ந்த ரீதியான ...மக உணர்ச்சி வருமா" என்று ...ட்டிருக்கிறார்.

இந்தியாவிலிருந்து இங்கிலாந் ...க்கு சென்ற அந்த அதிகாரி யார்? ...ந்த இலாக்காவைச் சேர்ந்தவர்? ...தற்காக அங்கு சென்றார்? என்ற ...பரங்களை இந்த நிகழ்ச்சியை ...வளியிட்ட உணவு மந்திரியார் ...வளியிடவில்லை என்ற போதிலும், ...ந்த அதிகாரி இங்கிலாந்துக்குச் ...சல்லக் கூடிய அளவுக்கு ஒரு ...ரிய பொறுப்பு வாய்ந்த இலாகாவைச் சேர்ந்தவராகத்தான் இருக்க வேண்டும்.

ஒரு அதிகாரி, தனக்குக் கொடுக்கப்பட்ட சர்க்கரைக் கூப்பன்களில் மிஞ்சியுள்ள கூப்பன்களைத் தன்னுடைய மோட்டாரை ஓட்டிய டிரைவருக்குப் பரிசாகக் கொடுத்தார் என்றால், அவரிடம் சிறிதளவாவது பொறுப்புணர்ச்சி இருந்திருக்க முடியுமா என்பதை இந்நிகழ்ச்சியை வெளியிட்ட உணவு மந்திரி சிந்தித்துப் பார்க்கவில்லை என்றே தெரிகிறது. கூப்பன்களைக் கொடுத்தவர் ஒரு அதிகாரி. அவற்றைப் பெற்றுக் கொண்டவரோ ஒரு சாதாரண மோட்டார் டிரைவர். ஒரு இந்திய அதிகாரியிடம் இல்லாத பொறுப்புணர்ச்சி, இங்கிலாந்திலுள்ள ஒரு மோட்டார் டிரைவரிடம் இருக்கிறதென்பதைத்தானே இந்நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது. அந்த அதிகாரியிடம் சிறிதளவாவது பொறுப்புணர்ச்சி இருந்திருக்குமானால், அவர் தம்மிடமிருந்த கூப்பன்களை மோட்டார் டிரைவரிடம் கொடுக்காமல், ரேஷன் அதிகாரிகளிடமே கொண்டுபோய்க் கொடுத்திருக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் அவரிடம் பொறுப்புணர்ச்சி இருக்கிறதென்று பொருள்கொள்ள முடியும்.

தேசிய உணர்ச்சி, பொறுப்புணர்ச்சி என்றெல்லாம் பேசும் தோழர் ஜெயராம் தாஸ் அவர்கள், அந்த உணர்ச்சிகள் நாட்டுமக்களுக்கு வருமா? என்று அங்கலாய்ப்பதற்கு முன், அத்தகைய உணர்ச்சிகள், நாட்டை ஆளும் அதிகாரிகளுக்காவது இருக்கிறதா என்று எண்ணிப் பார்த்திருக்க வேண்டும். இங்கிலாந்திலுள்ள ஒரு சாதாரண மோட்டார் டிரைவர், இந்தியாவிலுள்ள ஒரு பொறுப்பு வாய்ந்த அதிகாரிக்குப் பொறுப்புணர்ச்சி பற்றிய விளக்கமும் பாடமும் கற்றுக்கொடுக்கிறான் என்றால், இங்குள்ள அதிகாரிகளின் பொறுப்புணர்ச்சி எந்த அளவில் இருக்கிறதென்பது தெளிவாகிறது. மக்களிடம் பொறுப்புணர்ச்சி இருக்கிறதா என்பதை அறிய முயலுமுன் மந்திரிகளிடமாவது அது இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்கவேண்டும்.

சந்தர்ப்பத்திற்கு ஏற்றமாதிரி ஏதாவது ஒரு நிகழ்ச்சி அகப்பட்டுவிட்டால், அதை எடுத்துக் காட்டி, "இதோ பாருங்கள், இங்கிலாந்திலுள்ள ஒரு மோட்டார் டிரைவர், தனக்குக் கொடுக்கப்பட்ட சர்க்கரைக் கூப்பனைத்தான் பயன் படுத்தாமல், அதனை ரேஷன் அதிகாரிகளிடம் கொடுத்துத் தன்னுடைய தேசிய உணர்ச்சியையும், பொறுப்புணர்ச்சியையும் காட்டிக்கொண்டான்" என்று கூறிவிட்டால் மட்டும் போதுமா? குறிப்பிட்ட நிகழ்ச்சியில் அடங்கியுள்ள கருத்து விளக்கம் என்ன என்பதையன்றோ கவனிக்க வேண்டும்.

இந்திய அதிகாரியால் பரிசாகக் கொடுக்கப்பட்ட சர்க்கரைக் கூப்பன்களைப்பெற்றுக்கொண்ட மோட்டார் டிரைவர் அந்த அதிகாரியைநோக்கி,

> "எனக்குத் தரும் சர்க்கரைக் கூப்பன் எனக்குப் போதுமானதாக இருக்கிறது. எனவே, நான் இதைப் பயன்படுத்தப் போவதில்லை. ரேஷன் அதிகாரிகளிடமே கொடுத்துவிடப் போகிறேன். தேவைக்கு அதிகமாக நான் சர்க்கரையை உபயோகித்தால், நான் என்னுடைய மனச்சாட்சிக்கு விரோதமாக நடந்துகொண்டவனாவேன்."

என்று அந்த அதிகாரிக்குக் கூறியிருக்கிறான்; இல்லை! பொறுப்புணர்ச்சி என்றால் என்ன என்று பாடம் கற்றுக்கொடுத்திருக்கிறான்.

ஆனால், அந்த நிகழ்ச்சி இங்குள்ள 'நமது' உணவு மந்திரியாரால் பெருமைக்குரிய விஷயமாக-மேற்கோளாக எடுத்துக்காட்டப்படுகிறது. வெட்கப்படவேண்டிய — வேதனையூட்டக் கூடியநிகழ்ச்சி இங்குவிமர்சனப்படுத்தப்படுகிறது.

இங்கிலாந்திலுள்ள ஒருசாதாரண மோட்டார் டிரைவருக்கு இருக்கும் தேசிய உணர்ச்சியும் பொறுப்புணர்ச்சியும் இங்குள்ள மந்திரிகளுக்கும் மற்றுமுள்ள அதிகாரிகளுக்கும் ஏற்பட்டாலே எவ்வளவோ நன்மைகளை நாட்டுக்குச்

(10-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

ஞாயிறு] 6—11—49 [காஞ்சி


## இலட்சியகீதம் ஒரு விளக்கம்

✻

"திராவிடஸ்தான், மொழிவாரி மாகாணக் கோரிக்கை போன்றது என்றால், அதனை நான் ஏற்கிறேன். ஆனால், பாகிஸ்தானைப் போலத்தனியாட்சி தன்னிச்சைகொண்டதாக ஆவதை நான் விரும்புவதற்கில்லை" என்று, காங்கிரஸ் தலைவர் பட்டாபி, வெளியிட்டுள்ளார், பச்சையப்பன் கல்லூரியில் மாணவத் தோழர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் பொழுது!

மொழிவாரி மாகாணக் கோரிக்கை போன்றது என்றால் தனக்கும் சம்மதம் தான் என்கிறார். ஆனால் தன்னிச்சை நாடாக, சுதந்திர நாடாக ஆவதைத் தான் ஏற்பதற்கில்லை என்கிறார்.

இன்று எங்கும் மொழிவாரி மாகாணப் பிரிவினை பற்றி உரத்துப் பேசப்படுகிறது. காங்கிரஸ் தலைவர்களும், மொழிவாரி மாகாணப் பிரிவினை அவசியமே, என்ற முடிவுக்கு வந்து, எப்போது பிரிப்பது, எப்படிப் பிரிப்பது என்ற யோசனையில் ஆழ்ந்திருக்கிறார்கள். மொழிவாரி மாகாணக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருப்போர் ஏதோ ஒரு பெரிய 'விடுதலை'யை விரும்புவது போலப், பேசுகின்றனர், எழுதுகின்றனர், முழக்கமிடுகின்றனர்!

அதற்குச் சிறிதும் குறையாத அளவில் காங்கிரஸ் மேலிடமும் 'ஏதோ' ஒரு மகத்தான, மாபெரும் 'சலுகை'யை மக்களுக்கு, அளிப்பதாகக் காட்டிக்கொள்கிறது. மொழிவாரி மாகாணப் பிரிவினை என்பதில் 'பிரிவினை' என்ற வார்த்தை இருக்கிறதே ஒழிய, இதனால், ஏற்படும் நலன் யாருக்கு, என்பது கூர்ந்து நோக்கின், விளங்குவதாகும்.

இன்று இந்தியா முழுமையையும் டெல்லியிலிருக்கும் மத்திய சர்க்கார் ஆண்டு வருகிறது.

மத்திய சர்க்காருக்குக் கட்டுப்பட்டவையாக மாகாணங்கள் இருக்கின்றன. மாகாணங்கள், ஆங்கில ஆதிபத்யத்தின் அமைப்புகள்! வெள்ளையர் எடுத்தடி வைத்த காலத்தில் "இந்தியா" ஓரேதேசம் இல்லை யென்பதும், அதில் சென்னைமாகாணம் பம்பாய்மாகாணம், ஐக்கியமாகாணம் என்பதுபோல மாகாணங்கள் இல்லையென்பதும், யாவரும் அறிந்த விஷயம். ஆங்கில ஆதிபத்தியம் வளர்ந்து ஆட்சிச்சூத்திரம் அவர்கள் கைக்கு வந்தபின், நிர்வாக நலனை அனுசரித்து, மாகாணங்கள் உண்டாக்கப்பட்டன.

வெள்ளையன், வெளியேறிப்போய் விட்டான், தான் வந்தபொழுது, சிதைந்து சிக்கல்கள் நிறைந்து, குட்டி ராஜாக்களும், குறுநிலமன்னர்களும் நிறைந்துகிடந்த ஒரு பரந்த நிலப்பரப்பை, ஒரே 'தேசம்' ஆகஅமைத்துக்கொடுத்துவிட்டு.

சுயராஜ்யம் வேண்டும், அந்நியர் விரட்டப்படவேண்டும் என்ற உரிமைக்கிளர்ச்சியைஎழுப்பி 'இந்தியன்' என்ற வார்த்தையைக்கொண்டு, யாவரையும் ஒன்றுசேர்த்துபோராடியது காங்கிரஸ் கட்சி. உரிமைவேட்கையின் காரணமாக எழுந்து வளர்ந்த காங்கிரஸ்கட்சியின் தலைவர்கள், முன்னோடும் பிள்ளைகள், வடநாட்டவர்களாகயிருந்தனர். அவர்களுடன், அந்நிய ஆதிபத்தியதை விரட்டும் வேகத்துடன், ஆசையுடன் யாவரும் ஒன்று திரண்டனர். பலம் காங்கிரசுக்கு வளர்ந்தது. அதோடு அதன் வடஇந்தியத் தலைவர்களின்செல்வாக்கும் வளர்க்கப்பட்டது — அவர்கள் சொன்னதைக்கேட்கும் 'கிளி'களாகயிருந்தவர்களால்! எனவே, அந்நியர் வெளியேறியதும், ஆட்சிப்பீடமும், வடநாட்டார் கைக்குப்போயிற்று.

ஆட்சிப்பீடம்ஏறி, பூரண இந்தியாவுக்கும் தலைவர்களாக வீற்றிருக்கின்றனர் வடநாட்டுமக்களைச் சேர்ந்தோர். எல்லாத்துறையிலும், அவர்கள் வாழ்வு, வளமுடையதாகஇருக்கிறது. தென்னாட்டைச் சேர்ந்தோருக்கும், பதவிகளில்சில'துண்டு'களும், ஆசைகளும் காட்டி, 'எல்லோரும் ஒரே நாட்டவராக' வாழ்வதாகக் காட்டிவருகின்றனர்.

இன்று, இந்தியாவை ஆளும் மத்தியசர்க்கார், மாகாணங்களைப்
பதில், மொழிவாரியாக அமை
நாட்டம் கொண்டிருக்கிறது.
'பிரிவினை' என்று இருக்கிறதே
பிரிக்கப்படும் மொழிவாரி
ணங்கள் மத்தியசர்க்காருடைய
டுப்பாட்டில்தான் இருக்கும். இன்
கூறவேண்டுமானால், இப்போது
நிர்வாகத் தொல்லை, மாகாண
பிரிக்கப்பட்டுவிட்டால், மத்தி
காருக்குப் பெரிய அளவில் குறை
விடும். பெரிய மாகாணங்களைக்
காணிப்பதில் இருக்கும் கஷ்
மத்திய சர்க்காருக்குக் குறை
விடும்.

ஒரு ஜில்லா முழுமைக்கும்
கலெக்டர் இருந்து ஆளுவத
பதில், அந்த ஜில்லாவை பல தா
காக்களாகப் பிரித்து, அந்த
தாலுகாவையும் ஒரு தாசில்
பொறுப்பில் விட்டு, தாசில்தா
வேலையைச் சரிவரச் செய்கிறா
என்று கலெக்டர் மேற்பார்வை
வைத்தால், கலெக்டருக்கு
னிருந்த நிர்வாகக் கஷ்டம், முன்
விடக் குறைந்து விடுகிறதல்
அதுபோலத்தான் இந்த மொ
வாரி மாகாணப் பிரிவினை என்ப
இதனால், மத்திய சர்க்கார
நன்மைதானே ஒழிய, சங்கடம்
வும் கிடையாது. சென்னை போ
பெரிய மாகாணத்தை, தன் பா
யில் வைத்துக்கொண்டு, பொ
அதிகமாக இருக்கவே, அ
மூன்று அல்லது நான்கு மாகா
ளாகப் பிரித்து, அவைகளைத் த
தனியான நிர்வாகத்தில் விட்
சங்கடம் குறையுமல்லவா!
இடத்தை, கைக்குள் வைத்திரு
லேற்படும் சங்கடம், சிறிய
இடங்களை நிர்வகிப்பதில் ஏற்
தல்லவா!

இந்த 'தந்திரமான ஏற்பாடு
மொழிவாரி மாகாணப் பிரி
என்று பேசப்படுவதும், ம
சர்க்காரே இதில் முயற்சி எடு
கொண்டிருப்பதும்! இப்படி மொ
வாரியாகப் பிரிக்கப்படுவதால்,
விட முன்னேற்றக் கழகத்தார்
நாம், கூறிவரும் இலட்சிய
ஈடேறிவிட முடியாது.
"தமிழ் நாடு தமிழருக்கே"
நாம் முரசொலித்தோமே,
முழக்கத்திற்கும், இப்போது

படும் தமிழ் நாடு பிரிவினைக்கும், மலைக்கும் மடுவுக்குமுள்ள, வித்தியாசம் உண்டு.

* * *

"திராவிட நாடு" கோரும் நம்முடைய இருதயகீதமே வடநாட்டு ஆதிபத்தியத்திலிருந்துவிலகி, சுரண்டுதலுக்காளாகி நிற்கும் ஒரு சமுதாயம் தனக்கென ஒரு தனியாட்சி அமைத்து வாழவேண்டும் என்பதுதான். இதற்கான காரணங்களை, எண்ணமுடியாத அளவில் நாம் இதுவரை கூறிவந்துள்ளோம்.

பக்கத்திலே உள்ள பர்மா, தெற்கே கிடக்கும் சிறுதீவு இலங்கை போன்றவையெல்லாம் தனியரசு நிறுவி, தாங்களாகவே ஆட்சி நடத்தும்பொழுது எல்லாத் துறைகளிலும் வசதியும் வளமும் நிரம்பிய பழந் தமிழ்ச் சமுதாயம், தனக்கென ஒரு நாடமைத்து, தன் வாழ்க்கையை ஏன் நடத்த இயலாது என்ற உரிமை ஒலியே நம் பிரிவினை முழக்கமாகும்!

தனியாட்சியின் தன்மையையும், அது எப்படியிருக்கும் என்பதையும் நாம் எடுத்துச் சொல்லியே வருகிறோம். திராவிட நாடு திராவிடருக்கு ஆகவேண்டுமென நாம் கேட்கிறோமென்றால், அதன் பொருள் வடவருடன் வம்புக்கு போகிறோமென்றோ, வெறியைக் கிளப்பி அதன்பின் வாழ நினைக்கிறோமென்றோ அர்த்தமல்ல. வடநாட்டுக்கு இங்கு வசூலாகும் பணத்தை வரியாகக் கட்டிவிட்டு வாடியுழலும் கடன்காரன்போலக் கைகட்டிக்கொண்டு நிற்கும் நிலைமையைப் போக்கி இங்கு வழியும் இயற்கை வளங்களைக் கொண்டு மக்கள் உழைப்பையும் விஞ்ஞானத்தையும் மூலதனமாகக் கொண்டு வாழ்வது என்பதே பொருள். திராவிடத்தின் அரசிலே, அவர்கள் வாழ்விலே, பொருளியல் வளத்திலே, யாருடைய தலையீடும் மேற்பார்வையும் கூடாதென்பதே நம் இலட்சியத்தின் 'இருதய' கீதம்! இன்றோ, எதற்கெடுத்தாலும் நாம், மத்திய சர்க்காரை நோக்கிப் பிச்சை கேட்கும் பரிதாப நிலையில் கிடக்கிறோம். இந்நிலை நீங்கி, நாம் வாழ வேண்டுமென்பதே நம் ஆசை.

பகை கிளப்பவோ, வெறுத்து வாழவோ அல்ல நம்முடைய கோரிக்கை. தற்போது வடவருக்கும் நமக்கும் நீடிக்கும் போலி நேசம், வற்புறுத்தல்மேல் வாழும் நிலை நீங்கட்டும். நாமும், அவர்களும் 'நண்பர்களாக' வாழ்வோம் என்பதே நம்முடைய விருப்பமும், வேண்டுதலுமாகும். இதைப் பன்முறை கூறிவிட்டோம்—இன்றும் கூறுகிறோம்.

திராவிட நாடு தனித்தியங்கும் என்றால், இந்திய பூபாகத்துடன் 'வெட்டொன்று துண்டிரண்டாக' ஆகி, அப்படியே அரபிக்கடலுக்கும் வங்காளாகுடாக்கடலுக்குமிடையே ஒரு அகலக்கால்வாய்வெட்டி, பிரிந்துபோய்நிற்பதல்ல. நமக்கென ஒருநாடு அமைத்துக்கொள்ள வேண்டுமென்பது தான். வெளி நாட்டாரின் ஆபத்து இந்திய பூபாகத்துக்கு ஏற்பட்டால், தனித்துப் பிரிந்த திராவிடம், தனியாக நின்றுவிடாது. ஆபத்து ஏற்பட்டு, தாக்குதல் விளைந்தால் அருகில் 'இந்துஸ்தான்' இருக்கிறதே, அதற்குத்தானே ஆபத்து என்று 'திராவிடம்' சும்மா இருக்காது, ஒன்றுநின்று, கைகோர்த்து வெளிப்பகையை ஓட்டும். நாட்டைப் பிரித்துக்கொண்டால், தொடர்பு எல்லாவற்றையும் துண்டித்துக் கொண்டுபோய்விடாது என்பதையும் விளக்கிவருகிறோம். நேசம் நிலைக்கவும், வளரவும், அதற்கான ஒப்பந்தம் செய்துகொள்வோம், பிரிந்து நின்று, வாழ்வோம் என்று கூறுகிறோம். நட்பு நிலவட்டும், நாச நினைப்பு ஒழியட்டும், இரண்டுகுடும்பங்களாக வாழ்வோம், ஓரே குடும்பமாக இருந்துகொண்டு, இரண்டு 'வேறு' இனங்கள் உறுமிக்கொண்டும் வேதனையிலீடுபட்டுக் கொண்டும் போகவேண்டாம், இதற்குஒரு முடிவு ஏற்படட்டும் என்று கூறிவருகிறோம்

* * *

தனிநாடு வேண்டுமென நாம் கருதுவதில், கோருவதில், அரசியல், அறிவியல், பொருளியல், துறைகளில் பிற்போக்கில் கிடந்து உழல்கிறோம் என்பதுமட்டுமல்ல, பழம்பெருமையும், இருக்கிறது. எப்போதும் நாம், இன்று இருப்பதுபோல ஒருபரந்த உபகண்டத்துடன் இணைந்து, அல்லலில் அகப்பட்டு வாடியவர்களல்ல.

முன்பு, ஒருதனிநாடாகவே இருந்தோம்—வாழ்ந்தோம்! வெள்ளையர் இட்ட தீ நம்மீதுபரவுமுன், இங்கு எந்தவடநாட்டு ஆதிபத்திய அரசும் நம்மை அடிமைப்படுத்தியதில்லை! குப்தர்கள் ஆட்சியில் தானாகட்டும், மௌரிய சாம்ராஜ்யத்தில்தானாகட்டும், மொகலாய அரசில் தானாகட்டும், இவை எவையும் திராவிடத்தின் தன்னாட்சியைத் தகர்த்ததில்லை; கேடு சூழ்ந்ததில்லை. அதற்குப் பதில் இமயமீது நமது சேரன் 'விற்கொடி' நாட்டினான், சோழ மன்னன் பர்மாவில் பவனிவந்தான், கரிகாலன், சிங்கப்பூர்வரை சென்றான், என்றெல்லாம் நமது இலக்கியங்கள் நம் புகழைக் கூறுகின்றன. இத்தகைய வீரமும் தீரமும் விளையாண்ட இடம் நமது நாடு! இடிந்துபோன கோட்டை கொத்தளங்கள் இதோ, நம் கண்முன்னர், மடிந்துபோன மன்னாதிமன்னர்களின் வீரதீரத்தைப் பாடம் சொல்லிக்கொடுக்கின்றன! தரணியாண்ட தண்டமிழ் மகனே, ஏன் இன்று இக்கதிக்கு ஆளானாய், என்று நம் பண்டைப் பெருமை, நம்மைப் பரிகசிக்கிறது! இதயத்தைக் குலுக்கி விடுகிறது!

அதுமட்டுமல்ல, இழிநிலையில் கிடக்கும் நம்கண்முன்னே, இன்று உலக நாடுகள் ஓடிவருகின்றன. அவைகளைக் காணும் பொழுது, நம் ஆவல் பன்மடங்காகிறது. ஸ்பெயின் போர்ச்சுகல்! அயர்லாந்து — அதற்குள்ளும் ஒரு தனியரசு! ஸ்வீடன், நார்வே! சிறு நாடு இத்தாலி! துருக்கி — பழைய உதுமானிய சாம்ராஜ்யத்தின் துண்டு. இன்று அது தனிநாடு!

இவைகளைக் காணும் பொழுது வாழ்விழந்துகிடக்கும் நமக்கு ஆசை ஏன் தோன்றாது; வாழ வசதியிருந்தும் அதை மாற்றானுக்கு அளித்துவிட்டு மண்டியிட்டுப் பிச்சைக்கேட்கும் நிலைநீடித்தால் இதயம் ஏன் குமுறாது!

* * *

திராவிடநாடு திராவிடருக்காக வேண்டும், என்ற உரிமை முழக்கம் தனக்குப்பிடிக்காது என்கிறார் பட்டாபி! தனிமாகாணம் என்று கூறிக்கொண்டு, வடவர்பிடியில் அடங்கிக்

(அடுத்த பக்கம் பார்க்க)

கிடப்பதைத்தான் விரும்புவாராம் அவர்!

சர்க்கரை வேண்டுமா என்றுகேட்டானும், ஒருவன், சர்க்கரைக்குத் திண்டாடித் தெருவில் நிற்பவனே! 'ஆமாம், எங்கே' என்றானும் கேட்டவன் 'இந்தா, இக்காகிதத்தில் எழுத்தாக இருக்கிறது 'எடுத்துக்கொள்' என்று கூறினானும் எத்தன்! அதைப்போல இருக்கிறது, பிரிவினை என்பது உண்டு, ஆனால் 'பிரிந்து வாழ்வது' கிடையாது என்ற கூற்று! அவருக்குப் பிடிக்காததுதான் தனிநாடாக நாம் ஆக வேண்டுமென்பது — இப்போது. ஆனால், உரிமைக் கிளர்ச்சி ஒரு உதட்டுச் சொல் அல்லவே! அதிலும் நம் உரிமை முரசு, நம் இதயத்திலிருந்து எழும்பும் இலட்சிய கீதம்! இது, சீறிபெழும் புயல்! இதைத் தடுக்க நினைக்கலாம்— ஆனால், முடியாது! ✲

## பொறுப்புணர்ச்சி

7-ம் பக்கத் தொடர்ச்சி

செய்ய முடியும். நாட்டு மக்களுக்குத் தேசிய உணர்ச்சியும் பொறுப்புணர்ச்சியும் ஏற்படுமா என்று ஏங்கித் தவிக்கும் தோழர் தௌலத்ராம் போன்றோர், தங்களுடைய தேவைக்கும் அளவுக்கும் அதிகமாகப் பெறும் ஊதியத்தைக் குறைத்து நாட்டு மக்களுக்கு வழி காட்டுவார்களானால், அதனால் எவ்வளவோ நன்மைகள் நாட்டுக்கு ஏற்பட வழியுண்டாகும்.

ஒரு சில மந்திரிகளுடையவும், தூதுவர்களுடையவும் உயர்வும் கவுரவமும் குறையாதிருக்க வேண்டுமென்பதற்காக, அவர்களுக்கு, அவர்களின் தேவைக்கும் அளவுக்கும் மிஞ்சிய சம்பளம் கொடுத்துப் பெருமைப்படுத்தும் போக்கு, இப்போதில்லா விட்டாலும் நாளடைவில் நாட்டுக்கு இழிவையும் சிறுமையையுமே உண்டாக்கும். கோடிக்கணக்கான மக்கள் குடிக்கக் கஞ்சிக்கும் உடுக்கத் துணிக்கும் வழியின்றி, நடைப்பிணங்களாக ஊசலாடிக் கொண்டிருக்கும் ஒரு நாட்டில், ஒரு சிலர் மட்டும் உல்லாச வாழ்வு நடத்திக்கொண்டு, அதேபோது ஏழைபங்காளராகவும் நடித்துக்கொண்டு எவ்வளவு காலம் வாழமுடியும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

ஏழை மக்கள் எப்போதுமே தங்கள் குறைகளைக் கூறிக்கொள்ளும் அளவோடு இருந்துவிட மாட்டார்கள். குறைகள் தீர்க்கப்படாவிட்டால், குறைகளை முறையிடும் நிலை மாறிக் கொந்தளிப்பு ஏற்படும். இந்த நிலை நமக்கேன் ஏற்படப் போகிறதென்று எவரும் எண்ணி இறுமாந்து இருந்துவிட முடியாது. நாட்டை ஆளும் 'நல்லவர்கள்' இதை நன்கெண்ணிப் பார்க்கவேண்டும். பொறுப்புணர்ச்சி பற்றிப் பொதுமக்களுக்கு உபதேசம் செய்கிறோம்; நாம் எந்த அளவுக்குப் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்கிறோம் என்பதனை நாடாள வந்தவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நமது நாட்டிலுள்ள லட்சக் கணக்கான மக்கள் நடக்கவும் சக்தியற்று நலிந்து கிடக்கிறார்கள்; நாம் இங்கே ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறுமோட்டார்கள் வைத்துக்கொண்டு, உல்லாசவாழ்க்கையின் உச்சியில் உலவுகிறோமே, இது முறையா? நெறியா? என்று வெளிநாடுகளில் போய்த்தங்கியிருக்கும் நம்நாட்டுத் தூதுவர்களை எண்ணிப் பார்க்கும்படி இங்குள்ள ஆட்சித் தலைமைப்பீடம் செய்ய வேண்டும்.

இங்குள்ள மந்திரிகளும், பிற அதிகாரிகளும் பெறும் சம்பளமும் பிறவசதிகளும் உண்மையாகவே அவர்களுடைய தேவைக்குத் தகுந்த அளவில்தான் இருக்கிறதா அல்லது அதிகமாக இருக்கிறதா என்பதனையும் 'ஏழை பங்காளர்களான' ஆளவந்தார்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டும். நாம் ஆயிரம் இரண்டாயிரம் என்று சம்பளம் வாங்குகிறோம். நாம் இவ்வளவு சம்பளம் வாங்குவதற்கு வசதிசெய்து தந்த கோடிக்கணக்கான மக்கள் நம் எதிரிலேயே நடைப்பிணங்களாகத் திரிகின்றனரே! ஏன் இந்த நிலை ஏற்பட்டது? எப்படி ஏற்பட்டது? இதற்கு யார் பொறுப்பு? என்ற இன்னபிற அடிப்படை உண்மைகளை எண்ணிப்பார்த்து, அவற்றிற்கேற்ப முறைகளை மாற்றி அமைத்துக் கொள்வதுதான் தேசியஉணர்ச்சியும், பொறுப்புணர்ச்சியுமாகுமே யன்றிப், பொறுப்புணர்ச்சியுடன் நாங்கள் நடந்துகொள்கிறோம்; ஆனால் பொதுமக்களிடம்தான் அந்த உணர்ச்சி இன்னும் ஏற்படவில்[லை] என்று பேச்சழகுக்காகப் பேசிவி[ட்]டால், போதாது—பொறுப்புணர்[ச்]சிக்குரிய அறிகுறியையும் அங்[கு] காணமுடியாது. எனவேதான், பொதுமக்களுக்குப் பொறு[ப்]புணர்ச்சி ஏற்படவேண்டுமென்[று] விரும்பும் தலைவர்கள், முதலில் த[ங்]களிடம் அந்தப் பொறுப்புணர்[ச்]சியை உண்டாக்கிக்கொள்ள வேண்[டு]மென்று கூறுகிறோம். ✲

# கண்ணியம் காப்பீர்!

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்—தமிழ் நாட்டின் அறிவுக்கேணி, அங்கு, 24—9—49 அன்று, பட்டம் பெற்று, தாய் தந்தையரை மகிழ்வித்துத் தன் வாழ்க்கைப் பாதையைக் காணவந்த, மாணவர்களில் ஒரு சிலர், துவேஷம், அதன் விளைவாக விஷ எண்ணங்கள் கொண்டு, அமளி நடத்தியிருக்கின்றனர்; அட்டகாசம் செய்துள்ளனர்! கேட்கவும் மனம் கூசும் 'மோசமான' செயல்களில் ஈடுபட்டிருக்கின்றனர்!

இப்போது, பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றிவரும் அறிஞர் மணவாள ராமானுஜம் அவர்கள், ஒரு சிந்தனைச் சிற்பி, 'தன் வாழ்வு மாணவர் நலனுக்கே' எனும் குறிக்கோளும் நற்பண்பும் கொண்டு கடமையாற்றும் செம்மல்.

அவர் மீது சொந்தத் துவேஷ நினைவுகளின் விளைவாக எழும்பிய சொல்லம்புகளைப் பாய்ச்சியும், தொல்லைகளை விளைவித்தும் 'காட்டுமிராண்டித் தனமான' நடவடிக்கைகளில் ஈடுபட்டு, கலாட்டா செய்திருக்கின்றனர்.

'வெளியில' உலவும் 'சிலரின்' தூண்டு கோளின் விளைவாகவும் துணைவேந்தர் 'சிபார்சு'களுக்கு ஆட்படவில்லை என்ற சொந்தக் காரணங்களினால் ஏற்பட்ட 'துவேஷம்' காரணமாக வும் கிளப்பிவிட்ட 'தீ'யே இத்தீய செயல் என அறிகிறோம். மாணவர் உலகை, தங்கள் சுயநலலாபங்களுக்குப் பயன்படுத்த நினைத்த கெடுமதியாளரின் போக்கு, கண்டிக்கத்தக்கதுமட்டுமல்ல — மக்களால் வெறுத்து, ஒதுக்கப்பட வேண்டியதும் கூட. மாணவர்கள், தங்கள் கடமையுணர்ந்து, கண்ணியம் காக்க[க்] கொண்டு, அறிவுபெறுதலே முக்கி[ய]மாகும்-அதுதான், அவர்கள்கடமை

# ★ அவர் சிந்தனை! ★

கிடைக்கிறதா, சர்க்கரை" என்று
ட்டார்.
ஓ! கள்ளமார்க்கெட்டில்!!" என்று
ல தந்தனர் சுற்றி நின்றவர்கள்.

கேட்டவர் முகத்தில் ஆச்சரியம்
ர்ந்தது. 'அப்படியா?' என்று
ட்டார், அருகிலிருந்த அமைச்
ர.

அமைச்சரும் "ஆமாம்!" போட்
ர்.

'கள்ள மார்க்கெட் காரர்களை
பிடித்துத் தண்டிக்கவில்லை?"

அமைச்சர் வாய்திறந்து பதில்
வில்லை. தலையை ஆட்டினார்,
ன் மூலம் பதில் தெரிவித்தார்.

ஏன் தண்டிக்கவில்லை' என்று
திருப்தியுடன் கேட்டவர், அதற்கு
ல் 'ஏன்' போடவில்லை; அமைச்ச
'மௌனம்' தந்த விமர்சனம்
வருக்கு இரகசியத்தை விளக்
து போதும்! உடனே, சுற்றி
ன்றவர் பக்கம் திரும்பினார்.
ள வியாபாரத்தைப் பொதுமக்
பகிஷ்கரிக்கவேண்டும்' என்று
திமதி சொன்னார். அத்துடன்
ந்துவிடவில்லை, அவர் ஆத்திரம்
க்கரை இல்லாவிட்டால் என்ன
துவிடுமாம்! மக்கள் பிராணன்
ன்றும் போய்விடாது' என்று
க்கொண்டே சொன்னார்! சொன்
ர், சாதாரணமானவரல்ல, 'கள்ள
ர்க்கெட்டில் தான் விற்கப்படு
து' என்று ஆமாம் போட்டாரே,
மைச்சர் அவரைவிடப் 'பெரியவர்'
திகாரம் படைத்தவர்!

* • •

சம்பவம் நடந்த 2ந் தேதியன்று
ன்னை — மீனம்பாக்கம் விமான
லயத்தில் நடந்திருக்கிறது. பத்திரி
கள் பிரசுரித்துள்ளன. இந்திய
ளை மந்திரி டாக்டர் சியாம் பிர
த் முகர்ஜிக்கும், சென்னை கைத்
ாழில் மந்திரி பெருமாள்சாமி
டியாருக்கு மிடையே நடந்த
ழ்ச்சிதான் மேலே, நாம் தீட்டி
ருப்பது! இந்திய சப்ளை மந்திரி, விமான நிலயத்தில் தன்னைச் சந்தித்த மாகாண அமைச்சரைக் கேட்டிருக்கிறார் "மாகாணத்தில் சர்க்கரை நிலை எப்படியிருக்கிறது?" என்று. பத்திரிகை நிருபர்கள் பதில் தந்திருக்கின்றனர், 'கள்ளமார்க்கெட்டில் சரசமாகக் கிடைக்கிறது' என்று! செய்திகேட்ட, இந்திய அமைச்சர், துயரத்துடன் கேட்டிருக்கிறார் மாகாண அமைச்சரை "ஏன்?" என்பதாக! இவரோ, வாய்மூடி மௌனியாகித்தலையை மட்டும் அசைத்தாராம்! கேள்வி கள்ள மார்க்கெட்காரரைப் பிடித்துத் தண்டிக்காதது, ஏன், என்பது. கேட்டவர் அமைச்சர். அதற்கு, பதில் 'தலையை ஆட்டி'த் தெரிவித்தவரும் ஒரு அமைச்சர்! ஒரு அமைச்சர் 'ஏன்' என்று கேட்க, இன்னொருவர், இதற்கு முன் அவர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம், பதில்கூறி வந்தவர், இந்த 'ஏன்?' பிறந்ததும், வாய்மூடி மௌனியாகியிருக்கிறார்! 'தலையை' மட்டும் ஆட்டியிருக்கிறார்!! 'என்ன நான் கேட்கிறேன், தலையாட்டுகிறீரே' என்று தலைமைப் பீடத்தில் இருக்கும் மந்திரி கேட்கவில்லை! அதற்குப்பதில் சுற்றிநின்றோரைப் பார்த்து, பொதுமக்கள் சர்க்கரை வாங்காமல், கட்டுப்பாட்டுடனிருந்து 'கள்ளமார்க்கெட் காரர்களுக்குப் புத்திபுகட்ட வேண்டும் என்று போதிக்கத் துவங்கியுள்ளார், சர்க்கரை இல்லாவிட்டால் பொதுமக்களுக்குப் பிராணன் போய்விடும்' என்ற விளக்கத்துடன்!

மாகாண அமைச்சர் வாய்மூடி மௌனியானது, ஏன், என்று புரிந்து கொண்டதால்தான் டாக்டர் முகர்ஜி பேச்சை வேறுதிசைக்கு ஓட்டித்து மக்களுக்கு இதோபதேசம் செய்ய ஆரம்பித்துள்ளார் போலும்!

'ஏன்?' கேள்வி பிறந்ததும், கள்ள மார்க்கெட்காரர்களைத் தண்டிக்க நடவடிக்கையெடுக்காத காரணத்தை மாகாண அமைச்சர் விளக்கமுற்படவில்லை வேதனைதான் காரணமோ அல்லது "அவர்கள்" வேண்டியவர்களாக இருப்பதுதான் காரணமோ, நமக்கு விளங்கவில்லை!

ஆனால், அவர் மௌனத்தைக்கண்டதும், கேள்வி கேட்டவரும் மக்களுக்கு 'இதோபதேசம்' செய்துள்ளாரே, அதை அறியும்போதுதான், நம் உள்ளத்தில் ஐயம் ஏற்படுகிறது. கள்ளமார்க்கெட் காரர்களைத் தண்டிக்காதது ஏன், என்று காரசாரமாகக் கேட்டதும் மாகாண அமைச்சர் தலையை ஆட்டினாரே அப்போது அவர்முகத்தில் "சிந்தனை"க்குறியிருந்ததாம்! 'தினமணி' யார் கூறுகிறார்!! இந்தச் சிந்தனைக்குறி, உள்ளத்தில் குமுறும் வேதனையை வெளிப்படுத்த முடியாததன் விளைவாகத்தான் எழும்பியிருக்க வேண்டும். இந்தச் சிந்தனைக் குறிதான் இந்திய மந்திரியாரையும் 'கள்ளமார்க்கெட்காரர்களை ஏன் தண்டிக்கவில்லை; என்று கேள்விகேட்டது, தப்பிதம், என்று உணர்த்தி; விஷயத்தை மக்கள் தலையில் சுமத்தச் செய்திருக்கவேண்டும்!

அமைச்சர் முகத்திலே நிலவிய 'சிந்தனைக்குறி' பற்றி, நாம் சிந்திக்க விரும்பவில்லை—விளக்கம்தர விரும்பவில்லை. ஏனெனில் "வெளியாகும் விஷயம்" நம்தியாகிகளுக்கு நம் மீது சீற்றத்தை உண்டாக்கினாலும் உண்டாக்கலாம் என்பதால்!

• • •

சர்க்கரை இல்லாவிட்டால் பிராணன் போய்விடும் என்று கேட்டிருக்கிறார் டாக்டர் முகர்ஜி! சர்க்கரை இல்லாவிட்டால் மக்கள் உயிர், உடனே போய்விடாதுதான் ஆனால் அதுபோல 'சம்பளம் நீங்கள் வாங்கிக்கொள்ளாவிட்டால் உங்கள் உயிரா போய்விடும், சம்பாதித்ததே சாகும்வரை போதுமே' என்று கேட்க விரும்பவில்லை நாம்!

ஆனால், ஒன்று சொல்ல விரும்புகிறோம், மத்திய பீடத்திலிருக்கும் 'கனம்' மந்திரியாருக்கு! சர்க்கரை இல்லாவிட்டால் 'பிராணன்' போய்விடும் என்று, காரசாரமாக ஒரு கேள்வியைக் கேட்டிருக்கும் அவர், வந்தவுடன் ஒரு சம்பவம் நடந்திருக்கிறது அதே இடத்தில்! அமைச்சர் வந்திறங்கியதும், அவர் ஆயாசந் தீர்க்க விரும்பி, 'காப்பி' கொண்டு

வந்து கொடுத்திருக்கிறார்கள் அவருக்கு! காப்பியைக் கண்ட முகர்ஜி ஆவலோடு கேட்டிருக்கிறார் 'இது உண்மையான சென்னைக்காப்பியாக இருக்குமா?' என்று! அதாவது சர்க்கரை போட்ட காப்பிதானா, என்று!

வந்த மந்திரியார், சர்க்கரை போடாத அக்காப்பியைச் சாப்பிட்டால், அவரது பிராணன் போய் விடும் என்று அவரது பாணியிலேயே நாம் கேட்க விரும்பவில்லை! ஏனெனில், அவர் பெரியவர், மந்திரி—நாம்தான் சாதாரண 'ஜனங்களா'யிற்றே!

* * *

மக்கள் தவியாய்த் தவித்துக் கொண்டிருக்கின்றனர், தங்கள் வாழ்க்கையில் இன்றியமையாத தேவையாகிவிட்ட, காப்பி, டீ போன்றவைகளுக்குச் சர்க்கரை இல்லாத காரணத்தால். திண்டாடித் தெரு வீதியில் நின்று கிடக்கின்றனர்! இதுபற்றி, மக்களை ஆளும் பொறுப்பிலிருக்கும் மந்திரியாரிடம், "சர்க்கரை இருக்கிறது—கொள்ளை, கொள்ளையாக! இருந்தும், அது கிடைக்க முடியவில்லை மக்களுக்கு. காரணம், கள்ளமார்க்கெட் வியாபாரிகளின் அட்டகாசம்தான்' என்று அறிவித்துள்ளனர், அறிக்கைகள் மூலமாகவோ, கோரிக்கைகள் மூலமாகவோ அல்ல, நேரில்—நிருபர்கள். தகவல் கேட்டதும், ஏன் அவர்களைப் பிடித்துத் தண்டிக்கக் கூடாது என்று இந்திய மந்திரியார், அதிருப்தியும் ஆவேசமும் எழும்பக் கேட்டிருக்கிறார். அதற்குப் பதில் கூறவேண்டிய மாகாண அமைச்சர் 'சிந்தனைக் குறியுடன் தலையை ஆட்டி'னாராம்! கள்ளமார்க்கெட்காரர்கள், கொள்ளை லாபம் அடிக்கின்றனர், மக்கள் அவர்களின் லாபவேட்டையால் திண்டாடித் தெருவில் நிற்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டும் மாகாண அமைச்சர் முகத்தில் 'சிந்தனைக் குறி' எழும்பி பதில் சொல்ல முடியாமல் திகைக்க வைத்திருக்கிறது! ஏழை மக்கள் வாழ்வுக்காகவே எங்கள் சுயராஜ்யம் வருகிறது என்ற முழக்கமிட்டு 'கனம்' ஆகியிருக்கும் மந்திரியார், கேள்விக்குப் பதிலளிக்கத் திகைத்தாராம்!

வேடிக்கையாக இருக்கிறது, மக்கள் வேதனைப்படுவதன் காரணம் தெரிந்தும், அது போக்காதது ஏன், என்று விளக்காத "சூழ்நிலை"யில் மந்திரிமார்கள் இருப்பது! எப்படி யேற்பட்டது இந்தச் சூழ்நிலை!! திண்டாடுபவர்கள் பொது மக்கள்—கொள்ளை லாபம் அடிப்பவர்கள் வியாபாரிகள்.

மக்களைச் சுரண்டும் மதோன்மத்தர்களை ஏன் தண்டிக்கவில்லையென்று கேட்டால் மந்திரியார் 'சிந்தனைத் திரை'யைப் போட்டுக் கொள்கிறார்!

மக்கள் குறையைப் போக்கும் வகையில், கள்ளமார்க்கெட்காரர்களைப் பிடித்துத் தண்டித்து ஆவன செய்ய முடியாதது 'ஏன்' என்று விளக்கமுடியாதவராக விழிக்கிறார்!

விழிப்பின் காரணத்தை, இந்திய மந்திரியார் புரிந்துகொண்டு விட்டவர்போல, விஷயத்தையறிய விரும்பாது 'மக்கள், கள்ளமார்க்கெட் கடைகளில் சர்க்கரை வாங்காமலிருந்து, அவர்களுக்குப் புத்தி புகட்டவேண்டும். அப்படி சர்க்கரை வாங்காமலிருந்தால் ஒன்றும் பிராணன் போய்விடாது!" என்று உபதேசகாண்டம் படிக்கிறார்!

மக்கள் படும் அவதிபற்றிப் பேசுவதில் மாகாண மந்திரியாருக்கும் அக்கறை இருந்திருக்கிறது—அதை விசாரித்து அறிவதில் மத்திய சர்க்கார் மந்திரியாருக்கும் ஆவலிருந்திருக்கிறது!

ஆனால் "விஷயம்" புரிந்ததும் இருவரும், வேறு பாதைக்கு நழுவ ஆரம்பித்திருக்கின்றனர். ஒருவர் 'சிந்தனை'யுடன் திண்டாடியிருக்கிறார். இன்னொருவர் 'உபதேச காண்டம்' படிக்க ஓடியிருக்கிறார்!

'கள்ளமார்க்கெட் வியாபாரிகள்' பற்றிய பிரச்னை வந்ததும், ஏன் இந்த நிலை ஏற்பட்டது! இரண்டு மந்திரிமார்களுக்கும்! கேட்கத்தான் தோன்றும், யாருக்கும்!

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

டனின் மதவாதக்கொடுமையும் எங்களைக்கொத்தித் தின்கின்றன! பிரபுத்துத்துவம் பிச்சுத்தின்கிறது—குலாக்குகள் "குடும்பக் குலையை" அறுத்து வீழ்த்துகின்றனர்! எப்படி நாங்கள் வாழ்வோம், என்று சுகவாழ்வு எங்களுக்கும் கிடைக்கும் என்று ஏங்கி, மனிதப் புழுக்களாய், தவியாய்த் தவித்து, வாடி வதங்கிய ரஷ்யப் பாட்டாளிப் படை, தொழிலாளி வர்க்கம், பொது மக்கள் தங்கள் இலட்சியபுரியைக் காணுமுன் தாண்ட நேர்ந்த "சூதுக்கோட்டைகள்" இவை!

நவம்பர் 7-ஐக் காணுமுன், அவர்கள், சுயநலமிகளின் ஆட்டக்காயாக ஆக்கப்பட்டதும், சூதர்களால் தொல்லைக்காளானதும், ஏராளம்! பொங்கி எழும்பிய உணர்ச்சி வெள்ளத்தை, உடைத்துவிட முனைந்த 'ஆதிக்க வர்க்கம்' கேபாஸ்களின் உருவில், கிரென்ஸ்கி தோற்றத்தில் தோன்றத்தான் செய்தது! பாமர மக்கள், அந்தக் கெடுதலைப் பண்பினரின் ஆசை வார்த்தைகளில் மயங்கி தீயை நாடிய விட்டில்களாகவும் ஆயினர்!

ஆனால், முடிவு, நவம்பர் 7! சூதர்களின் கொட்டம் அடக்கப்பட்டு, உண்மைச்சுதந்திரம் தோன்றிய நாள்! மதவாதிகளின் வஞ்சமும், உழைப்பாளிகளின் உணர்ச்சியால் தங்கள் வாழ்வை வளமாக்கிக் கொள்ள முயன்ற சந்தர்ப்பவாதிகளின் தந்திரமும், சுகராஜ்யம் வந்துவிட்டது என்று சொல்லிக்கொண்டு தங்களை "ஆட்சிப் பீடத்தில்" அமர்த்திய தொழிலாளி வர்க்கத்தை சூழ்ச்சியால் ஆள நினைத்து ஆட்டிப் படைக்கும் அதிகாரவர்க்கமும், தூள், தூளாக்கப்பட்ட தினம் நவம்பர் 7! ரஷ்யாவுக்கு நல்வாழ்வு தந்த நாள், உண்மைச் சுதந்திரம் வழங்கிய தினம்!

புது வாழ்வு காணப் போராடிய ஏழை உள்ளங்களை, பாமரர்களை "சூது" துரத்தாமல் விடவில்லை! சூழ்ச்சி விரட்டத்தான் செய்தது, மத சந்நியாசி வடிவில், 'வாழ்வு' நல்கும் 'தலைவர்கள்' உருவில்! அத்துணையையும் தாண்டி, முகிழ்த்ததுதான் பொதுவுடைமைச் சமுதாய—ரஷ்யக் குடியரசு!

34 ஆண்டுகள், முனைந்து நின்று, வெற்றிமுரசு கொட்டி, நவம்பர் 7ஐக் காண்பதற்குள் ரஷ்ய பாட்டாளி மக்கள் அடைந்த அல்லல்கள் சிந்திய இரத்தம், கொஞ்ச நஞ்சமல்ல! உன்மத்தர்களின் சூழ்ச்சி, உரிமைப் போரை ஒடுக்க நினைத்தோரின் தந்திரம், பாட்டாளிகளின் தலைவர் என்ற போர்வையில் 'படாடோபி'களாக மாறிய சுயசஞ்சீவிகள் ஆகிய அத்துணை இருள் மேகங்களையும் கிழித்துக்கொண்டு எழும்பிய நிலா—நவம்பர் 7!



# நவம்பர் 7

[அரங்கண்ணல்]

வம்பர் 7!

வெற்றிநாள், வீரத்திருநாள், டுதலை விழா துவக்கப்பட்ட நாள்! லர்ந்த சருகாகிக் கிடந்த உழைப் ாளிகள் உன்னத வாழ்வு பெற்ற ப்பற்ற திருநாள்! இரத்தம் ரண்ட உழைத்தும் 'இல்லை' என்று ங்கி நின்ற ஏழைகள் இன்பம் ண்ட விழா நாள்! பஞ்மை நீங்கி, ஞ்சகம் ஒழிந்து, சமதர்மம் ழைத்த நாள்! பொதுவுடைமை த்தநாள்!

917 நவம்பர் 7!

புது யுகத்தின் பொன் ஏடு, பூரித் க் குலுங்கும் புது வாழ்வின் டிப் பீடம்! 'புனித' தினம்!

'மதோன்மத்தர்களின்' சுக வாழ் க்குத் தங்கள் உழைப்பை நாசமாக் க் கொண்டோர் நல்பாதை கண்ட ன்னுள்!

முதலாளித்துவம் என்ற மூர்க்க தலையின் பற்கள் பிடுங்கப்பட்டு, ாட்சி யென்கிற காட்டாற்றில் ருட்டிவிடப்பட்ட உன்னத தேதி வம்பர் 7!

ரஷ்ய மக்களின் இதய கீதம்! நல் ாழ்வு நாதம் கிளப்பிய நல் வீணை! ருப்பவன்—இல்லாதவன், ஏமாளி —எத்தன் என்ற பேதம் ஒழித்துப் பருமை கொண்ட 'தியாக' தினம்! ாட்டாளிப் படை வரிசை, ஏங்கிக் டந்த, இன்பம் முகிழ்த்த முதல் ததி!

நவம்பர் 7—ஒரே நாளில் அரும்பி லர்ந்த மலரல்ல! எத்தனையோ ண்டுகள், உழைப்பின் வியர்வை ந்த விருந்து! விருந்துகாண, இலட் ய புரியை எட்டிப் பிடிக்க, தொழி லாளி வர்க்கம் ஆளான தொல்லை கள்—ஒரு சோகத் தொடர் கதை!

## 1

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிக்காலம்! போர் மேகம், ரஷ் யாவைக் கப்பிக்கொண்டது—ஜாரின் ஆதிபத்திய ஆசையின் விளைவாக. ஜப்பானுக்கும் ரஷ்யாவுக்கும் போர் மூண்ட, இந்நேரம்தான், அங்கு தொழிலாளர்களின் உரிமைப் போர், அரும்பி, விரிந்து கொண்டிருந்தது, சிறிய நாடான ஜப்பானுடன், பெரிய நாடான ரஷ்யா போர் புரிந்தும் வெற்றிகாண முடியவில்லை — மதுக் கோப்பையின் விளிம்பிலும், மங்கை யரின் காலடிச் சத்தத்திலும் 'மகிழ் வை'க் கண்டு ரசித்துக்கொண்டி ருந்த ஜாரால் எப்படி முடியும், அது! எனவே, சரியில்லாத ராணுவம், குறைவான பயிற்சி, ஆகிய காரணங் களால் ரஷ்யா வெற்றிகாண முடிய வில்லை!

ஜாரின் அட்டகாசம் ஒரு புறமும், ரஸ்புடீனின் மதவாதத் திமிர் மறு புறமும், பண்ணைக்காரர்களின் படாடோபம் இன்னொரு திசையி லும், பண முதலைகளின் 'நாச நர்த் தனம்' இன்னொரு பக்கத்திலும் நடைபெற, நடுவில் கிடந்து நலிந்து, மெலிந்து, உயிருள்ள கூடுகளாய் உலவிய ரஷ்யப்பொதுமக்கள், ஜாரின் போரை விரும்பவில்லை — வெறுத் தார்கள், வீண் என்றார்கள், குமுறி னார்கள்! ஏற்கெனவே, ஜாரின் பிடி யில் சிக்கி, அலமந்து, கிடந்த மக்க ளுக்கு, உழைப்பாளர்களுக்கு, போரில் ஏற்பட்ட தோல்வி, அரசாங் கத்தின் மீதிருந்த நம்பிக்கையைப் பறக்கடித்தது!

முன்பே தாங்கமுடியாத வேதனை கொடுங்கோலர்கள் கையில் சிக்கி கோலாகல வாழ்வினரால் வாட்டப் பட்டு வறுமையில் கிடந்து, வாடி-வதங்கிய மக்களுக்குப் போரால் ஏற் பட்ட நெருக்கடியும், வாழ்க்கை வேதனையும், ஆத்திரத்தைக் கிளறி யது! நாம் வேதனைப்படுகிறோம், மன்னன் வீணை வாசிக்கிறான், பசி, பசி என்று பதறுகிறோம், அவன் பாடி மகிழ்ந்து கொண்டிருக்கிறான் என்ற ஆத்திரம் அவர்கள் நரம்பு களைத் துடிக்கவைத்தது! வேல் பாய்ந்த புலி ஆகிக்கிடந்தனர் மக் கள்! இரண்டிலொன்று தீர்த்துவிடு கிறோம், இனிமேல் பொறுக்க மாட் டோம், ஏழைகளாய் கோழைகளாய் நின்றலறமாட்டோம் என்ற வீரா வேசம் அவர்கள் இரத்தத்தைக் கொதிக்க வைத்தது!

மன்னன் மாளிகை நோக்கிச் செல் வோம்; குறைகளைச் சொல்வோம்; அதுவரை ஆலைகளுக்குத் திரும்பா தீர்கள்! வேலை நிறுத்தம் செய்யுங் கள், என்ற வீர முழக்கத்துடன் செயிண்ட் பீட்டர்ஸ் பர்க் ஆலைத் தொழிலாளிகள் அத்தனை பேரும் குமுறிக் கொந்தளித்துக் கிளம் பினர்!

அருவிக்கு அணைக்கட்டுப் போல, அவர்கள் உணர்ச்சியை அடக்கிப் பிடிக்க ஒரு ஆள், அதுவும் சாதா ரணமான ஆளல்ல—மதகுரு, உரு வெடுத்தான், தொழிலாளர்களின் தலைவன் என்று சொல்லிக்கொண்டு! அவர்கள் நலம் நாடுவதே தன் இலட்சியம் என்று சொல்லிக் கொண்டு, ரஷ்ய பாக்டரி தொழிலாள ரின் அசெம்பிளி என்ற கட்சியின் திரைமறைவில்!

பசி பொறுக்காத பட்டினிக் குரல் எழும்பியிருந்ததேதவிர, அப்போது, பகுத்தறிவு ரஷ்யாவில் தலைநீட்டாத நேரம் மதகுரு என்றாலே பக்தியும், பாசமும் பரவிக் கிடந்த வேளை. எனவே, கேபான் என்ற மதகுரு வின் சுயரூபம் அவர்களுக்கு விளங்க வில்லை! கேபான் — தங்கள் துயர் தீர்க்க வந்தவர், மதகுரு, எனவே மக்கள் கவலை போக்க விரும்புவர் என்றே நம்பினர்!

பாட்டாளி மக்கள் குமுறிக் கொந் தளித்து எழும்பினர்! உணர்ச்சியும் ஆவேசமும் ஒவ்வொரு சொட்டு இரத்தத்திலும் விளையாடிக் கொண்

டிருந்தது! இந்த ஆவேசத்தையும்—பேருணர்ச்சியையும் கேபான் 'சதி' என்ற படுகுழியில் தள்ளினான்! பழி வாங்கினான்!!

"இரண்டிலொன்று பார்த்துவிடுவோம், வாழ்ந்தால் நாம், வீழ்ந்தால் ஜார்!" என்று தொழிலாளர்கள் முழக்கினர்.

"ஜார் நமது மன்னர், நல்லகுணம் படைத்தவர்......" என்று ஆரம்பித்தான் அவன்.

"இல்லை! இல்லை!! இனி அவர் இங்கு தேவையில்லை" என்றனர் தொழிலாளர்கள்!

"பதறாதீர்கள். உங்கள் நலன்களில் எனக்கில்லையா பொறுப்பு. வாருங்கள் யாவரும், மன்னனிடம் நேராகச் சென்று முறையிடுவோம்! குறைகளைக் கூறுவோம்! நம் ஏழ்மை நிலையை, பட்டினிக் கோலத்தைக் கண்டால் அவர் பதறுவார், பசி போக்க வழி செய்வார்!" என்று பேசினான்! அவன் பேச்சுகளில் தொழிலாளர் வாழ்வுக்கு உழைக்கும் உத்தமர் இவர்தான் என்ற 'நடிப்பு' இருந்தது! நடிப்பை உண்மையென்று நம்பிய மக்கள் அவன் வலையில்வீழ்ந்தனர்! கேபான் தான் நல்லது செய்பவன், நமது கலங்கரை விளக்கம் என்று நினைத்தனர்!

முடிவாக 1905 ஜனவரி 9-ந்தேதியன்று கேபான் கட்டளைப்படி யாவரும் ஒன்று கூடினர். சம்மட்டியும் அரிவாளும் தாங்க வேண்டிய கையில் மாதாகோவிலின் கொடிகள்! மனிதரைக் கேவலமாக மதிக்கும் மதோன்மத்தன் — ஜாரின் படம் இன்னொரு கையில்! இந்த 'தலைகீழான' நிலையில் பாட்டாளிப் படை பவனி சென்றது ஜாரின் மாரிகால மாளிகை நோக்கி! 'ஒழிப்போம்! அழிப்போம்!' என்று முழக்கியவர்கள் தங்கள் கையிலேயே ஜாரின் படத்தை ஏந்தும்படி செய்தான். மதக் கொடிகளை மகிழ்ந்து தூக்கும்படி செய்தான்—கேபான், மதகுரு தனது மாயவார்த்தைகளால், தொழிலாளர் தலைவன் என்று கூறிக்கொண்டு!

மாரிகால மாளிகைநோக்கிப் பட்டினிப் பட்டாளம், ஏழைகளின் ஊர்வலம், அமைதியாக வந்தது, மன்னனிடம் "மக்கள் குறை தீர் இறைவா! மறந்து விட்டீரே, மன்னாதி மன்னா! கொடுமை எங்களைக் குத்திச் சாய்க்கிறதே — இப்படிச் செய்யலாமா நீங்கள். நாங்கள் உங்கள் பிரஜைகள் அல்லவா!" என்றுகுறை தெரிவிக்கும் ஒரு கோரிக்கையைச் சமர்ப்பிக்க! வீரப் பரணி பாடிச் செல்ல வேண்டியவர்கள், சோகபிம்பங்களாய் சென்றனர்—கேபான் தலைமையில்! விடுதலை முரசு ஆர்த்துச் செல்ல வேண்டியவர்கள் ஆதரவற்ற அனாதைகள் போல அழைத்துச் செல்லப்பட்டனர்—கேபான்—மதகுருவால்! வீரமுழக்கங்கள் செய்துகொண்டு அணிவகுத்துச் செல்லவேண்டிய அவர்கள் "ஸ்துதி" பாடிக்கொண்டு சென்றனர்!

அந்த ஊர்வலத்தில் 14,000 எலும்பு உருவங்கள் இருந்தன— மனைவி, குழந்தை, தள்ளாடி வரும்



பெற்றோர் அத்துணை வறுமைப் பிம்பங்களுடனும் தொழிலாளி வர்க்கம் ஜாரின் மாரிகால மாளிகையை நெருங்கியது — நம்மைக் கண்ணால் கண்டால், மன்னன் அருள்பாலிப்பான் என்று மதகுரு கூறுகிறாரே, என்ற ஆசையுடன்! நிராயுதபாணிகளாய், சாந்தம் தழுவ, துதி பாடிக் கொண்டு, வீரர்கள் கோழைகளாய், விலாவெலும்பு முறிக்கும் ஆவேசங் கொண்டவர்கள் வீணர்களாய், சோக பிம்பங்களாய், ஒரு கையில் மதக்கொடியும், இன்னொரு கையில் தன் படமும் ஏந்தி வரும், அவர்களைக் கண்டான் ஜார்! எலும்புக் கூடுகளாய், எண்ணெய் காணாத தலையினராய், ஒட்டி உலர்ந்த வயிற்றுடன் வரும் பட்டினிப் பட்டாளத்தைக் கண்ட அவன் நெஞ்சம் துடிக்கவில்லை, அதற்குப் பதி முகத்திலே புன்சிரிப்பு ஏற்பட்டது! கேபான் திறமையே திறமை என்று கூறிக்கொண்டான், எவ்வளவு எளி தாகப் புலிகளைப் பூனைகளாக்கி விட் டார், எரிமலையை அணைத்துவிட் டார், என்று தனது மையாளன 'கேபானின்'—மதகுருவின்-வெற்றி கண்டு மகிழ்ந்தான்! மன்னன் குறை தீர்ப்பான் — என்று அமைதியுடன் வந்து கொண்டிருந்த பட்டினிப் பட்டாளத்தின்மீது ஜாரின் போலீஸ் படை பாய்ந்தது! சுட்டது! சுட் டது!! சுட்டுக்கொண்டேயிருந்தது!!!

குறை தீர்த்துக்கொள்ள வந்தோ ரின் குருதி பீடர்ஸ்பர்க்கின் வீதி களிலே வழிந்தோடியது! குழந்தைகளை ஏந்திச் சென்றதாய், சடே ரென அவள்மீது பாயும் குண்டு, மரமெனச் சாயும் அவள், 'அம்மா!' 'அம்மா!' என்றலறும் குழந்தை, அதன்மீது ஓடிவரும் போலீஸ் படை, வீல் என்ற சப்தம், விழுந்து கிடந்தவரின் கையொரு பக் கம், காலொரு பக்கம் 'பூட்ஸ்' அணிந்த போலீஸ் கால்கள் எத்தித் தள்ளும் காட்சி, கோரதாண் டவமாடியது! வயோதிகர்கள், அம ளிக்கு இரையாயினர்! பெண்கள் ஓடமுடியாது, துப்பாக்கிக் குண்டு களால் துளைக்கப்பட்டனர்! தொழி லாளர்கள் மரம் என வீழ்ந்து கிடந்தனர்!

எங்கும் பிணக்காடு! பிரேத ராஜ் யம்!!

கேபான் — என்ற மதகுருவின் வஞ்சகம்வெற்றி பெற்றஇச்சம்பவம் இரத்தஞாயிறுஎன்றுகுறிப்பிடப்பட் டது. அந்தஅளவுக்கு அன்று,குருதி ஓடிற்றும்! பாமர பாட்டாளி மக் களின் தலைவனாகநடித்து, அவர்களை பலிகொடுத்தான் ஜாருக்கு!

1905 ஜனவரி9 ஞாயிறு—ரஷ்யப் புரட்சியின் அஸ்திவார நாள். உதட்டில் பாட்டாளிகளுக்குப் பரிவும், உள்ளத்தில் வஞ்சமும் கொண்டு 'தலைவன்' ஆகித் தகாத பாதையில் தொழிலாளரை அழைத் துச்சென்று ஜாரின் கொடுமைப் படு குழியில் அவர்களை வீழ்த்திய ஒரு 'சண்டாளனின்' கபடத்திரை கிழிக்கப்பட்ட நாள்! மதப்போர்வையில் மக்கள் நலன் நாடுபவனாக, போலிவேடம் போட்டுத் திரிந்த வனின் கபடநாடகம் வெளிப்பட்

து, அன்றுதான்! உரிமைவேட்கை
பத் தனக்குச் சாதகமாக்கிக்
ாண்டு, ஜாரின் பாராட்டையும்,
புத்துவத்தின் ஆதரவையும்
ற்ற ஒரு 'ஆளின்' சூழ்ச்சி அம்
மாகியதினம் 1905 ஜனவரி 9!!

## 2

ஜார்வீழ்ந்தான்! அட்டகாசப்
ம்பரையின் வாழ்வு அஸ்தமித்
து! 1917-பிப்ரவரி 27-ந்தேதி—
ரத்த ஞாயறு' நடைபெற்றுக் கிட்
ந்தட்ட பன்னிரண்டு ஆண்டு
ளுக்குப்பின்—தொழிலாளி வர்க்
வெற்றி கண்டது! பரம்பரை
ட்சியும், படாடோபிகளின் உல்
சமும் மண்ணோடு மண்ணாயின!
தலாவது உலகப் பெரும்போர்
த பரிசு, பிப்ரவரி புரட்சி! மக்
விரும்பாமலிருந்தும், ரஷ்ய
திக்க புரியினர் ஜாரின் பிரபுத்து
, ரஷ்யாவைப் போர்க்குகைக்
ள் தள்ளியது! 1914-ஜூலை 19-ந்
தி ஜெர்மனி ரஷ்யாமீது
ாடுத்தபோர், நடைபெற்றுக்
ாண்டிருந்தது. இந்நிலையில்,
ாரிடி தாங்காது வறுமையில்
டும் ரஷ்ய மக்கள் உள்ளமோ,
ன்று இந்தப்போர் ஒழியும்! சுகம்
றுவோம்!" என்று துடிக்க ஆரம்
த்தது. போரில் வெற்றிக்குப்பதில்
ன்வாங்கும்' வீரச்செயலே, ஜாரின்
ட்சியில் நடைபெற்றது. தோல்வி
ல் தோல்வி, போரோ நடக்கிறது,
ன்னலோ அதிகமாகிறது என்ற
லகண்ட பாட்டாளிகள், பட்டா
ந்து வீரர்கள் குமுறினர், கொந்
ித்து எழுந்தனர் விளைவு, புயல்
சிற்று, ஜாரின் சாம்ராஜ்யத்தை
யச்செய்தது! ஜார் வீழ்ந்தான்,
ட்சி வெற்றிபெற்றது — ஆனால்
ட்டாளி மக்களின் ஆசை தீர
லை, இன்பம் எழும்பவில்லை,
நுளே தொடர ஆரம்பித்தது!
ின் கொடுங்கோன்மை தாளாது
த்த மக்களின் ஆவேச வெறி,
ற்றிதந்தது. ஆனால், அனுபவம்,
வர்களுக்கில்லாததால், அந்த
ற்றியை, மீண்டும் பசுத்தோல்:
ர்த்த 'புலிகளே' சாதகமாக்கிக்
ாண்டனர்! ஜார் ஆட்சி கவிழ்ந்த
, 'இன்பம்' வந்துவிட்டது,
லட்சியம் ஈடேறிவிட்டது என்று
ப் போதையில் ஆழ்ந்தனர்
ட்சி செய்து வெற்றிகண்டவர்

கள்! போதையைப் பயன்படுத்திக் கொண்டு போகவாழ்வை அனுபவிக்க 'பூர்ஷாக்கள்' திட்டமிட்டனர், மிதவாத இலட்சியங்கள் கொண்ட மென்ஷிவிக் கட்சியினர் போன்றவர்களின் ஆதரவை அணைப்பாகக்கொண்டு தற்காலீகஅரசாங்கம் ஒன்றை அமைத்தனர்! தொழிலாளர்களின் விடுதலைக் கீதத்தை எழுப்பிய, லெனினை தலைவராகக்கொண்ட போல்ஷிவிக் கட்சியின் தலைவர்கள், வெளிநாடுகளில், ஜாரின் கொடுமைக் காலத்தில் விரட்டப்பட்டிருந்தபடியால், புரட்சி வெற்றி பெற்றதும் தங்கள் ஆசையை 'சந்தர்ப்பவாதிகள்' நிறைவேற்றிக் கொண்டனர்! புரட்சி முடிந்து விட்டது என்ற போதையில் ஆழ்ந்து கிடந்த மக்கள் வாழ்வு வந்துவிட்டது என்று நம்பினர். ஆனால் ஜாரை வீழ்த்தச் சிந்திய குருதியின்மீது இன்னொரு 'பிரபுத்துவ' கோட்டை எழும்ப ஆரம்பித்தது! ஜார்மன்னன், பார்லிமெண்டில் (டூமா என்றுபெயர்) தலைவனாகஇருந்த நோட்ஜ்யான்கோ என்பவனே, அரசாங்க டூமாவின் கமிட்டிக்குத்தலைவனானன்! ஜாருடன் கூடிக் குதூகலித்துக்கிடந்த லவாங் இளவரசன் இந்தச் சர்க்காரின் முதல்வனானன்! கிரேன்ஸ்கி என்ற சோஷியலிஸ்டு புரட்சிக்காரனும் இந்தச் சர்க்காரில் சேர்ந்தான்—கிரென்ஸ்கி சர்க்கார், புரட்சிமுடிந்த ரஷ்யாவை ஆள ஆரம்பித்தது!

சுதந்திர வாழ்வு வந்துவிட்டது, சுயராஜ்யம் அமைந்துவிட்டது, என்று கருதிக்கிடந்தனர்—ரஷ்ய மக்கள். ஆனால், அவர்களின் இரத்தத்தின் மீது 'புதுப் புழு' உருவாகி நெளிய ஆரம்பித்தது! ஜார் ஒழிந்ததும், போர் நின்றுவிடும், அமைதி நிலவும், இன்பம் ஏற்படும் என்று எதிர்பார்த்தார்கள் — ஆனால் அது நடக்கவில்லை. ஆட்சிப்பீடம் ஏறிய அரசாங்கம், புரட்சியில் பூத்த புது மலரானாலும், பழைய வாடையையே கொண்டிருந்தது! தொடர்ந்து பிரான்ஸ், இங்கிலாந்து ஆகியவைகளின் தோழனாக ஜெர்மானியப் போரை நடத்த ஆரம்பித்தது!

மக்கள் எந்தக் குறைகளைப் போக்கிக் கொள்ள விரும்பி, தங்கள் இரத்தத்தைச் சிந்தி, ஜாரை வீழ்த்தினார்களோ, அந்தக் குறைகள் மறையவில்லை வளர ஆரம்பித்தது. வேதனை வாழ்வு மக்களிடையே தலைவிரித்தாடியது—தாங்காது துடித்த அவர்கள் 'புரட்சி முடிந்துவிடவில்லை, பொன்னைத் தேடி, பொல்லாதவர்கள் கையில் கொடுத்துவிட்டோம்' என்று கருதினர். இந்நிலையில் வெளிநாட்டுக்கு ஜாரால் விரட்டப்பட்டிருந்த லெனின், ஸ்டாலின் முதலானோர் நாட்டுக்குத் திரும்பினர்!

உண்மை நிலைகளை எடுத்துக்கூறி மக்களை, விழிப்படையச் செய்தனர். ஆத்திரம், மீண்டும் மலர்ந்தது. ஜார் வீழ்ச்சியடைந்து, தற்காலீக சர்க்கார் ஏற்பட்ட பின்னரும், வேலைநிறுத்தங்கள், வேதனை முழக்கங்கள் எழும்ப ஆரம்பித்தன. இந்த வேதனைக் கீதம் கேட்ட, தற்காலீக சர்க்கார் புயல் எனச் சீறியது, 'புல்லர்களே! எங்களையா எதிர்க்க எண்ணிவிட்டீர்கள், இயலுமா' என்று கொதித்தனர்.- ஆவேசம் அவர்களை அடக்குமுறைப் பாதையில் விரட்டியது.

புரட்சிவீரர் லெனின்மீது 'ராஜத்துரோக' குற்றம்! கைது செய்ய வாரண்ட்!! போல்ஷிவிக் கட்சி முன்னணி வீரர்கள் கைது! அச்சகம் நாசமாக்கப் பட்டது! பிராவ்தா பத்திரிகைமீது பாணம்! போல்ஷிவிக் செய்தித்தாள் விற்றவன் படுகொலை!

குருதிகொட்டி, ஜாரின் மமதையை வீழ்த்தி, வெற்றிகண்டோம், வீணரை வீழ்த்தினோம் என்று எக்களிப்புக் கொண்டிருந்த பாட்டாளிமக்களுக்கு "வந்த சுதந்திர ராஜ்யம்" வழங்கிய பரிசுகள் இவை! தற்காலிக அரசாங்கத்தில் அமர்ந்திருந்த பிரபுத்துவப் பிரதிநிதிகள் குச்சுக்கோவும், மில்ரூகோவும் இவைகளை வழங்கினார்கள்! இலட்சியங்களை நிர்மாணிப்போம், ஏழைகளுக்காகப் பாடுபடுவோம் என்று கூறிவந்த "சோஷியலிஸ்டு" கட்சிப் பிரதிநிதிகளாக அரசாங்கப் பீடத்தில் அமர்ந்திருந்த கேரன்ஸ்கியும், செரிடேல்லியும், சேர்னேவும் அடக்குமுறைப் படலத்துக்கு ஒத்துழைத்தனர்!

## 3

வேதனை முடியவில்லை, வறுமை எங்களை சுட்டுப்பொசுக்குகிறது, துயரக் கண்ணீர் வடிக்கின்றனர் மீனவி மக்கள், ஜாரின் ஆட்சித்திமிரும், ரஸ்பு

(12-ம் பக்கம் பார்க்க)

# "விஜயம்"—ஒரு விஷயம்

பண்டித நேரு, அமெரிக்காவில், அலங்காரமாகப் பவனி வந்துகொண்டிருக்கிறார். தேசியத் தினசரிகளில், அவரது "விஜயம்" பற்றி வரும் விமர்சனங்களும், அமெரிக்க அரசாங்கம் அவருக்கு அளிக்கும் வரவேற்பு, அதிகாரிகள் அவர்பற்றி வர்ணிக்கும் அழகு, அவரிடம் மக்கள் காட்டும் பரவசம், ஆகியவைகள் பற்றி விவரிக்கின்றன — படங்கள் மூலம் தெரிவிக்கின்றன.

'மக்களின் பரவசம்', 'மகிழ்ந்தனர் நேருவைக் கண்டு' எங்கும் பிரமாத வரவேற்பு என்றெல்லாம் புகழ்கின்றன; போற்றுகின்றன.

இந்தப் புகழ் அந்தாதியில் பொதிந்திருக்கும் பொருள் என்னவென்பது, நாம் மட்டுமல்ல, நல் முடிவு காணும் யாவரும் புரிந்துகொண்டே இருக்கிறார்கள். நேரு இந்தியாவை முதலாளித்துவக்கூடாரத்துக்கு இழுத்துச் சென்று பிணைக்கிறார் என்று ரஷயப் பத்திரிகை கூறியுள்ளது. அமெரிக்காவில், நேருவுக்கு அளிக்கப்படும் வரவேற்புகள் பற்றி, 'அமெரிக்காவே ஒன்று திரண்டு போற்றுகிறது' என்பதாக இங்குள்ளவர்களால் வர்ணிக்கப்படுகிறது. அவரை வரவேற்று, பண முதலைகளால் நடத்தப்படும், அத்துணை பத்திரிகைகளும் பரணி பாடியுள்ளன! புகழ்க்கீதம் இசைத்துக் கொண்டுள்ளன! போற்றித் துதிக்கின்றன! அவரது வரவால், அமெரிக்க முதலாளித்துவம் பெரிதும் மகிழும் அறிகுறியே தென்படுகிறது. அதற்கேற்றவகையிலேயே பிரதமர் நேருவும், "இந்தியாவுக்கு வாருங்கள்! முதலாளிகளாக ஆகுங்கள்! தொழிற்சாலைகளை நிறுவுங்கள்!" என்று வரவேற்புக் கூறியுள்ளார்.

வருக, வருக என்று வருந்தியழைத்துள்ளார். அவரது "விஜயம்", இந்திய முதலாளித்துவத்துக்கும், அமெரிக்க முதலாளித்துவத்துக்கும் இடையே ஒரு கூட்டு முன்னணியை, புதுக் காதலை, எழுப்புவதாகுமென, முன்னோக்குக் கொண்டோர் கருதுகின்றனர் — கூறுகின்றனர்.

ஒரு நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட வீரரை, பல்லாண்டுகள் சிறையில் கழித்த ஒருவரை, இன்னொரு நாட்டு மக்கள், மனிதாபிமானத்தால், மனிதர்களில் ஒரு மாணிக்கம் என்று கருதி வரவேற்பதும், வாழ்த்துக் கூறுவதும் இயற்கையானதே — அது கண்டு, பாராட்டுப் பெறுபவரின் படைவரிசைக்கு மட்டுமின்றி, எல்லோருக்குமே மகிழ்ச்சியும், 'என்ன, நன்னைக்கு அவர்களுக்கு', என்ற எண்ணமும் எழும்பத்தான் செய்யும்!

ஆனால், பண்டிதநேருவின் "விஜயம்" அமெரிக்க மக்களால், எந்த நிலையில் கருதப்படுகிறது என்பது குறித்து, வரும் தகவல் ஒன்று, அவருக்கு அமெரிக்காவில் அளிக்கப்படும் வைபவ விழாக்கள், மக்கள் இதயத்திலிருந்து எழுந்த, குதூகலத்தின் விளைவுகள் அல்ல என்பதாகக் கூறுகின்றது.

அமெரிக்காடுமட்டுமல்ல — எங்கும் "மக்கள்" என்றால், அவர்களிலே பெரியமனிதர்களாய், விளம்பரப்படுதாக்களாய் இருப்பவர்கள்மட்டுமே கருதப்படுகிறார்கள். அப்படி வாழ்பவர்கள், வாழப்பிறந்தவர்களாகஇருக்கும் ரகத்தைச்சேர்ந்தவர்கள். அவர்கள்பாராட்டையும், புகழ்ச்சியையும் பெறுவது, அவ்வளவு கஷ்டமானதல்ல. அவர்கள் போற்றுதல் கீதம், உதட்டிலிருந்து உதிப்பது, உலர்ந்தது, உண்மையில்லாதது!

இவர்கள் சிலர்; ஆனால், மக்களோ பலர், அவர்களிடமிருந்து, ஒரு தலைவர் குறித்து எழும்பும் இதயபூர்வமான வாழ்த்தும், புகழ்மாலையுமே, பொன்னைப் போற்றற்குரியன. அவை, அவர்கள் நெஞ்சிலிருந்து எழும்புபவை, நினைக்கும் நேரத்தில் மலர்பவையல்ல — நீடித்து நிலை... பவை.

நேருவுக்குக்கிடைத்த வரவேற்... படாடோபம், பரவசம், பலப்ப... வைபவங்கள், இருந்திருக்கலாம்... ஆனால் மக்களின் 'இதயபூரிப்... இருந்ததா—யாருக்கும் கேட்க... தோன்றும் கேள்வி இது! ஏனெனி... அவர் விஜயம்குறித்து, முதலா... வர்க்கத்தின் தூதுவராய், நல்... பிள்ளையாய், சென்றிருக்கிறா... என்று முன்னோக்கு உள்ளவர்... ளால் கருதப்படுகிறது. எனவே... அமெரிக்கமக்கள் நிலை எப்படியிரு... கிறது, நேருவைப்பற்றி அவர்கள்... கருதுவதென்ன என்பது பற்... நேருவை அறிமுகப்படுத்திவைத்த... நியுயார்க்கில் பேசிய எலியனார் ரூஸ்... வேல்ட்டின் வார்த்தைகள் விளக்கு... கின்றன. எலியனார் — முன்னா... அமெரிக்கத்தலைவர் ரூஸ்வெல்டின்... மனைவியார். அவர் நேருவை அறி... முகப்படுத்தி வைக்கையில் கூறு... கிறார்.

"நேருவுக்கு இன்னும் அதி... மான அளவில் போது வரவேற்... கள் அளிக்கப்பட்டிருக்க வேண்... டும். அமெரிக்க மக்களின் இதய... களிலிருந்து வரவேற்புக்கிடைக்... றது அவருக்கு, என்று கூறு... படியாக, அதிகமான அளவி... பொது வரவேற்பு கொடுக்க... பட்டிருக்கவேண்டும்"

வரவேற்புக் கூட்டத்தில் வா... விட்டுப்பேசியுள்ளார் அவர், இந்... விதமாக! மக்கள் இதயங்களிலிருந்... —என்றால், பொருள் என்ன, என்... எண்ணத்தோன்றும். நேருவுக்கு... அமெரிக்காவில் கிடைப்பது ஆ... யரசர்களின் அணைப்புத்தான், அவ... கள்தான் போற்றுதல் கீதம்பாடுகின்... றனர், புகழ்ந்து துதிக்கின்றனர்— லாபநோக்கோடு! சுயநலத்தோடு... என்பதும், மக்களின் இதயத்தி... ருந்து, எங்கிருந்து கிடைக்கவேண்... டுமோ அங்கிருந்து வாழ்த்து... மகிழ்ச்சியும் குவியவில்லையென்பது... எலியனாரின், சொற்களி... ருந்து விளங்குகின்றன. திரை... விலக்கும் இத்தகவல் — நேருவின்... 'விஜயம்' பற்றி விளக்கும் ஒ... 'விஷயம்!'

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street. Kancheepuram,